தென்றல்

ஆசிரியர் — கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 30—6—56 | சனிக்கிழமை | இதழ் 2

அவர்களும் 'அந்தச் சொற்பொழிவும்'

"இந்திய அரசியலே ஒரு பெரும் குழப்பம். அந்தக் குழப்பங்களுக்கிடையே பெரும் குழப்பங்களைத் தேடிப்பிடித்து, குழம்பாமல் எடுத்துச் சொல்வது என்பது மிக்க கடினமானதாகும்.

"இந்திய அரசியலின் வரலாற்று ஏட்டைப் பொறுமையாக—அமைதியாக வாசிப்பவர்களால், அதில் நிலவும் கொள்கைக் குழப்பங்களைக் கண்டறிய முடியும்.

"ஆங்கில அறிஞன் ஒருவன் கூறினன்-'பொதுமக்கள் எதையும் சீக்கிரத்தில் மறந்துவிடக் கூடிய சுபாவமுள்ளவர்கள்; எல்லாவற்றையும் நினைவில் வைத்துக் கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள் அல்ல; இன்னொருவர் திறம்பட — உறுதியாக — விடாமல் எடுத்துச் சொன்னலன்றி விஷயங்களை அவர்கள் நினைவில் வைத்துக் கொள்வது கடினம்'- என்று!

"அதனல்தான், இந்திய அரசியலில் நிலவும் கொள்கைக் குழப்பங்களைத் தொகுத்தெடுத்துச் சொல்லவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்,

"இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிகவும் குழம்பிப் போன மேதை பண்டித நேரு என்றல், பலர் திடுக்கிட்டுப் போவார்கள். இந்தியாவிலேயே கொள்கைக் குழப்பங்களுக்குப் பெயர் போன பெரிய மனிதர் அவர்தான்!

"இந்தியாவிலேயே கொள்கைக் குழப்பங்களுக்குப் பெயர் போன ஒரு கட்சி உண்டென்றல் அது நமது அனுதாபத்திற்குரிய இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிதான்.

"1935, 1940, 1945, 1948, 1949, 1956 என்று தொடர்ச்சியாகக் கடந்த 20 ஆண்டுக் காலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியினர், கொள்கைத் துறையில் எத்தனை 'குட்டிக்கரணங்கள்' அடித்திருக்கிறர்கள் — எத்தனை முறைகள் முன்னுக்குப் பின் முரணகப் பேசி வந்திருக்கிறர்கள் என்பதை, அவர்களது கட்சிப் பத்திரிகைகளின் பழைய 'பைல்'களைப் புரட்டினல்

"அதேபோல, பண்டித நேரு, கடந்த காலத்தில், எத்தனை முறை கொள்கைக் குழப்பங்களில் சிக்கித் தவித்திருக்கிறர் என்பதை அவர் எழுதிய புத்தகங்கள்—அவர் பேசியவையும் எழுதியவையுமடங்கிய புத்தகங்கள் நமக்குச் சொல்கின்றன.

"பலர், நேருவின் புத்தகங்களை வாங்குகிறர்கள்—பெருமைக்காக—! 'நமது நூலகத்திற்கு இருக்கட்டும்—' என்று!

அட்டையைத் தொட்டுப் புரட்டிப் பார்க்கிறர்கள்; 'கொடுத்த ஏழு ரூபாய் பெறுமானதுதான்' என்று எண்ணித் திருப்திப் பட்டுக்கொண்டு, புத்தக அறையில் உள்ள அலமாரியில் திணித்து விடுகிறர்கள்; பிரித்துப் படிப்பதே இல்லை. பின்னர் அவரது மகனே, பேரனே அந்தப் புத்தகங்களை, பழைய புத்தகம் வாங்குவோரிடம் விற்று விடுகின்றனர்.

"ஆனல், அந்தப் புத்தகங்களை விரித்துப் படிப்பவர்களுக்குப் புரியும்-இத்தனை பெரிய முரண்பாடுகள் மலிந்த இவர், எத்தனை பெரிய புகழுக்குப் பாத்திரமானவராக்கப் பட்டிருக்கிறர்— என்பது!

"கம்யூனிஸ்டுகள், முன்பு, எதை, 'வேண்டும், வேண்டும்' என்று அழுத்தமாகக் கூறிவந்தார்களோ, அதைப் பின்பு— இன்று, 'வேண்டாம்' என்று, அதனினும் அழுத்தமாகக் கூறுகிறர்கள்!

இவாளைப் பற்றி அவாள்!

"குழம்பிய சிந்தனையில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி இருந்து வருகிறது. உலகப் பிரச்சினைகளில் தனக்கே உரிமையுடைய ஒரு கருத்தையும் அக்கட்சி கொண்டிருக்கவில்லை.

கடந்த காலத்தில், அனைத்திற்கும் மாஸ்கோவையே அக்கட்சி எதிர்நோக்கிக் கொண்டிருந்தது; அங்கு நிகழ்பனவற்றை எல்லாம் ஆதரித்து வந்தது.

சென்ற சில மாதங்களில் இரஷ்யாவில் விரிவான மாற்றங்கள் ஏற்பட்டதிலிருந்து, இந்தியக் கம்யூனிஸ்டுகள் ஒரே கலக்கத்தில் உள்ளனர்; அதன் பலனக, தாங்கள் இப்பொழுது எந்த வேடத்தைப் போட்டுக்கொள்ளுவது என்று தெரியாது விழிக்கிறர்கள்.

இந்தியக் கம்யூனிஸ்டுகள் இதற்கு முன்னர், தங்கள் சிந்தனையைச் செயலாற்றியதே கிடையாது; இரஷ்யாவின் கட்டளைகளைக் கண்மூடிப் பின்பற்றுவதில் மனநிறைவு கொண்டிருந்தனர்.

ஆனல் இப்பொழுதோ, இரஷ்யாவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அவர்களைச் சுயமாகச் சிந்திக்க வைத்திருக்கிறது; ஆனல், அவ்வாறு சிந்திப்பது ஒரு கடினமான முறையாக அவர்களுக்குத் தென்படுகிறது"

—பண்டிதநேரு

"முன்பு, குறிப்பிட்ட ஒரு பிரச்சினைக்குத் தரப்படும் முடிவு 'தீதானது; வேண்டாதது; இந்த முடிவு மனித சமுதாயத்திற்கே பெரிய சாபத்தீடு' என்று பேசுவார்கள்; பின்பு—இன்று, எந்த முடிவைப் பெரும் சாபத்தீடு என்று வர்ணித்தார்களோ—கண்டித்தார்களோ—எதிர்த்தார்களோ, அதே முடிவை ஏற்றல்தான் மக்களுக்குச் சாப விமோசனம் கிடைக்கும் என்று வாதாடுவார்கள்.

"இந்தக் குழப்பங்களை எல்லாம் நாட்டு மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்என்று நாம் விரும்புகிறேம்; ஏன்?

"இந்தக் கொள்கைக் குழப்பங்களுக்கு ஊடேதான், அந்த மனிதர்களின் உள்ளம் எப்படிப் பட்டது என்பதற்கும், இந்தக் கொள்கைக் குழப்பவாதிகளின் சேவையினல் நாடு முன்னேற முடியுமா—முடியாதா என்ற கேள்விக்கும் உண்மையான விடையும், நமக்குக் கிடைக்க முடியும்.

"கம்யூனிஸ்டுகள்தான் தங்களின் கடைசி அத்தியாயத்தில் காலெடுத்து வைத்துவிட்டார்களே; அவர்களைப் பற்றி நாம் ஏன் பேசவேண்டும் — என்று சிலர் என்னிடம் கேட்டார்கள்.

"கம்யூனிஸ்டுகள் தங்களின் கடைசி அத்தியாயத்தில் காலெடுத்து வைத்திருக்கிறர்கள் என்பது உண்மையானது என்றல், நாம் அதற்காக வருத்தப்படுகிறேம். ஆனல், உண்மையிலேயே அவர்கள் கடைசி அத்தியாயத்தில்தான் காலெடுத்து வைத்துள்ளார்களா? அல்லது, 'தொடரும்' என்று போட்டு, இரண்டாவது பாகம் துவங்குவார்களா என்பது தெளிவாக வேண்டுமே!

"அப்படி அவர்கள் இரண்டாவது பாகம் துவங்கக்கூடாது என்று எச்சரிப்பதற்காகத்தான்- அவர்களுடைய கரம், 'முற்றிற்று' என்று எழுதக் கூசினலும், நாட்டு மக்களுடைய கரம், 'முற்றிற்று! முற்றிற்று!! முற்றிற்று!!!' என்று மூன்று முறை திட்டமாக எழுதவேண்டும் என்ற காரணத்திற்காகத்தான்- அவர்களுடைய கொள்கைக் குழப்பங்களை நாம் பேசுகிறேம்.

"இன்று ஓர் செய்தி வந்தது— 'தேர்தலில் தி. மு. கழகத்துடன் சேர, அணி அமைக்கக் கம்யூனிஸ்டு கட்சியின் நிபந்தனை'— என்று!

"ஏதோ, 'கட்சியே, கட்சியே! என் அருமைக் கம்யூனிஸ்டுக் கட்சியே! தேர்தலில் நிற்க விரும்புகிறேன். உன்னேடு என்னையும் சேர்த்துக்கொள்ள மாட்டாயா?'—என்று தி. மு. கழகம் விண்ணப்பம் [illegible]

சம்பத் விளக்கமும் கம்யூனிஸ்டுகள் கலக்கமும்

திறந்து பார்த்து 'ஓகோ! தேர்தலில் நிற்க விரும்புகிறாயா?' என்று கேட்டு, 'அப்படியானால், இதோ ஒரு நிபந்தனை; என்னோடு சேர்ந்து தேர்தலில் ஈடுபட,' என்று கருணை பொங்கி வழிவதால் கூறுவது போலவும் நினைத்துக் கொண்டு கம்யூனிஸ்டுக் கட்சி நிபந்தனை விதிக்கிறதாம்!

என்ன நிபந்தனை அது? 'தி. மு. கழகத்தினர், தங்கள் திராவிட நாடு இலட்சியத்தைக் கைவிட்டுவிட வேண்டும்' என்பதுதான், அந்த நிபந்தனை!

''யாரோ ஒரு கருணையாளன், 'நீ எனது வீட்டுத் திண்ணையில் படுத்துக்கொள்ள வேண்டுமானால், உன் உயிரை விட்டுவிட்டுப் பிணமாக வா! என் திண்ணையில் கிடத்திக் கொள்கிறேன்,' என்று கூறினானாம்! எப்படி இருக்கிறது அவனது கருணை?

''அதுபோல, கம்யூனிஸ்டு கட்சியினர், நாம் நமது உயிர் இலட்சியமான திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டுவிட வேண்டுமென்கிறார்கள்; நாம் பிணமாக வேண்டும் என்கிறார்கள்! இது நிபந்தனையா?

''சில கையாலாகாதவர்கள், ஒருவனை எதிர்க்க முடியாத போது, 'நீ நாசமாய்ப் போக; உனக்கு அது வர — இது நேர,' என்று வசை பாடுவார்கள் — சபிப்பார்கள்; அது போன்றது

பிரியச் சொன்னது '42; பிணையச் சொல்வது '56!

தான் கம்யூனிஸ்டுகள் நம்மைப் பார்த்துக் கூறுவதும்!

''நம்மை எதிர்க்கவோ முடியவில்லை; நாம் இருப்பது இடைஞ்சலாக இருக்கிறது — பேராபத்தாக இருக்கிறது; எனவே, நம்மை நோக்கி, 'தி.மு.க.-வே! நீ செத்துப் போ! நீ நாசமாய்ப் போ! நீ செத்துப் போனால் தான் உன்னுடைய சாவில் தான் எனக்கு வாழ்வு இருக்கிறது,' என்று கூறுகிற சையறு நிலையில் — கையாலாகாத நிலையில் வசை பாடுகிறார்கள் — கம்யூனிஸ்டுகள் என்பதைத்தான் அவர்கள் விதிக்கும் நிபந்தனை நயக்குச் சொல்லுகின்றது.

''இங்கே உள்ள கம்யூனிஸ்டுகளின் நிலை இது. ஆனால் அகில இந்திய ரீதியில், அவர்கள் தங்களுக்கென ஒரு கொள்கை இருப்பதாகக் கூறுகிறார்கள்.

''அப்படி அகில இந்திய ரீதியில் இவர்கள், 1942-ல் கொண்டிருந்த கொள்கை என்ன? 1945-ல் கொண்டிருந்த கொள்கை என்ன? 1948-ல் அந்தக் கொள்கைகள் என்னவாயின? 1949-ல் இவர்கள் எப்படி நிலை தடுமாறினார்கள்? 1955-ல் எப்படிப் பேந்தப் பேந்த விழித்தார்கள் என்பதை நாம் அறிய முற்படலாம்.

''தென்னாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றுவதற்கு முன்பே கம்யூனிஸ்டுகள் தோன்றியிருந்தனர். அவர்கள் தோன்றிய அந்த நாட்களில் எல்லாம் அகில இந்திய ரீதியில் தங்களுக்கென ஒரு கொள்கைவகுத்துக் கொண்டிருந்தார்கள்.

''அன்று அவர்கள், இந்தியாவில் உள்ள பல்வேறு மொழி பேசுகிற மக்களுக்கும், சுயநிர்ணய அடிப்படையில், இந்திய யூனியனிலிருந்து பிரிந்து போகும் உரிமை வேண்டும் என்று வாதாடி வந்திருக்கிறார்கள்.

''இந்தியக் கம்யூனிஸ்டுக்கட்சியினர் நடத்திவந்த தங்களின் (People's War) 'மக்கள் யுத்தம்' என்ற பத்திரிகையில் இதுபற்றி எழுதியிருக்கிறார்கள். 'மக்கள் யுத்தம்' என்ற பெயரே, ஒரு கொள்கைக் குழப்பத்தின் அறிகுறியான பெயர்!

அந்தப் பத்திரிகையின், 1942-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 9-ந்தேதிய இதழில் ஒரு தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. அந்தத் தலையங்கத்தில் உள்ளதை நான் உங்களுக்கு எடுத்துக் கூறுகிறேன்.

''...இந்தியாவைப் பிரிப்பது என்பது பெரும் பாபம் என்று காந்தியார் கூறுகிறார்; காந்தியாரின் அபிப்பிராயம், தேசியத் தலைமையின் ஒருமுகப்பட்ட அபிப்பிராயமாகும்; ஆகவே தான், பிளவு அதிகரிக்கும் முன்பு பிளவிற்கு ஒரு மேல் பாலம் போட வேண்டியது பொறுப்புள்ளவர்கள் செயலாகும். விடுதலை பெற்ற இந்தியாவில் மைனாரிட்டி இனத்தவரின் உரிமைகளைப் பறித்து, மெஜாரிட்டி இனத்தவர் அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்துகிற நிலைமை கூடாது என்று, தேசியக் கருத்துடையோர் உரத்த குரலில் கூறி வருகின்றனர். ஆனால், மெஜாரிட்டியினரின் கொடுமைக்கு ஆளாகியிருக்கிற மைனாரிட்டியினர், இப்படிப்பட்ட வாய் வார்த்தைகளினால் திருப்தி அடைந்துவிட முடியாது. துளி கூட அச்சமில்லாத நிலை அவர்களுக்கு ஏற்படுத்தித் தரப்பட்டாக வேண்டும். அதன் சமநிலை 'எல்லோருக்கும் எளிதில் புரியக் கூடிய வகையில், வகுத்துத் தரப்படுதல் வேண்டும்; மைனாரிட்டியினருக்கு, பிரிந்து போகிற உரிமை தரப்பட வேண்டும்-அதாவது, சுதந்திரத் தனி அரசை அவர்கள் நிறுவிக் கொள்ளத் தேவையான உரிமை அவர்களுக்குத் தரப்பட வேண்டும்;

'' முஸ்லிம்களின் புதிய விழிப்புணர்ச்சியையும், ஆந்திரர் — கர்நாடகர் — மராட்டியர் ஆகியோரிடைத் தோன்றியுள்ள புதிய தேசிய இன விழிப்புணர்ச்சியையும் அசட்டை செய்வது பெரிய தொரு அரசியல் அபத்தமாகும். அப்படி அசட்டை செய்வது, பெரும் ஆபத்தில் கொண்டு போய் விட்டுவிடும்.''

மாநில மாநாட்டில் தோழர் சம்பத் அவர்கள் பேசிய பேச்சுக்கு மறுப்புத் தரும் வகையில் 'ஜனசக்தி'யின் மூன்று இதழ்களில் தோழர் 'ஜீவா' அவர்கள் எழுதிய கட்டுரைகளுக்குப் பதில் தரும் முயற்சி இது. அதன் முதற்படியாக தோழர் சம்பத் அவர்களின் முழுப் பேச்சையும், தோழர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்பி, வெளியிட முயன்றதில், அந்தப் பேச்சே மூன்று பக்கங்கள்வரை வந்துவிட்டது. அதனால், இந்தப் பேச்சைத் தொடர்ந்து, ஜீவாவின் பதிலுக்கு, பதிலாக வரும் எனது விளக்கம் அடுத்த இதழ்களில் வரும். அந்த விளக்கம் இரண்டொரு வாரங்கள் நீடிக்கலாம்.

— கண்ணதாசன்

இது, 'மக்கள் யுத்தம்' இதழில் காணப்படும் தலையங்கத்திருப் பகுதியாகும்.

''பல்வேறு தேசிய இன மக்களுக்கும் பிரிந்துபோகிற உரிமை தரப்பட வேண்டும் — என்று, 1942-ல் பேசினார்கள் கம்யூனிஸ்டுகள்; பிரிந்து போகிற உரிமை என்றால், எவருக்கேனும் விளங்காமல் போய் விடுமோ என்று நினைத்து, இவர்களே விளக்கம் கூறியிருக்கிறார்கள் — 'பிரிந்துபோகும் உரிமை என்றால், சுதந்திரத் தனியரசை நிறுவிக்கொள்வது' — என்று!

''அதே 'மக்கள் யுத்தம்' பத்திரிகையின் 1944-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ந் தேதி வெளிவந்த இதழில், 'முஸ்லிம் அல்லாதவர் உள்ளத்தில், முஸ்லிம்களின் கோரிக்கையான பாகிஸ்தான் அமைவது — இந்தியாவிலிருந்து பிரிவது நியாயம், நியாயம் என்ற உணர்வு வலுத்து வருகிறது' என்றும் எழுதிக் காட்டியிருக்கிறார்கள், கம்யூனிஸ்டுகள்!

''முஸ்லிம்களின் பாகிஸ்தான் கோரிக்கை நியாயமானது; ஆந்திரர்கள், கன்னடியர்கள், மராட்டியர்கள் இவர்களைப் போன்ற தேசிய இனத்தவர்கள் (இந்திய யூனியனிலிருந்து) பிரிந்துபோக வேண்டும் என்று விரும்பினால்-தனி அரசு அமைத்துக்கொள்ள வேண்டும் என்று விழைந்தால், அவர்களுக்கு அந்த உரிமை வழங்கப்படுதல் வேண்டும்— என்றெல்லாம் கம்யூனிஸ்டுகள், 1942-ல் கூறினார்கள்; 1944-ல் கூறினார்கள்; 1946 வரை கூறினார்கள்.

''பின்னர் 1947-ல் பேந்தப் பேந்த விழித்தார்கள்; 1948-ல் அவர்கள் நிலை மாறியது — நிலை குலைந்தது; 1949-ல் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி, 'இந்தியாவை மீண்டும் துண்டாட வேண்டும் — திராவிடத் தனி அரசு அமைக்கவேண்டும்' என்று முழக்கமிட்ட வண்ணம், ஓங்கி வளரத் தலைப்பட்டது. அப்படி வளர்ந்து நாட்டு மக்களிடையே அது வலுப்பெற்று விட்ட பேருருவத்தைக் கண்ட போது, தங்களுக்கு ஏற்பட்ட மிரட்சியினால் நிலைகுலைந்த கம்யூனிஸ்டுகள், குழம்பிப் போனார்கள்.

''அந்தக் குழம்பிய நிலையில், அகில இந்திய ரீதியில் இயங்கும் அவர்கள், வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்குத் தாங்களும் 'சாய்காலாக' இருக்க வேண்டும் என்று கருதத் தலைப்பட்டனர். உடனே, 1942-ல் எதை எதை வலியுறுத்தினார்களோ, எந்த உரிமைகள் மக்களுக்குத் தரப்படுதல் வேண்டும் என்று போராடினார்களோ அந்தக் கொள்கைளுக்கு விரோதமாகப் பேசத் தலைப்பட்டார்கள்; 'நாட்டுப் பிரிவினை கூடாது; திராவிட நாடு அமைப்பது தீதானது; தமிழர்கள் என்பவர் ஒரு தேசிய இனத்தவரா? திராவிடர்கள் என்பது, வரலாற்றிலேயே இல்லாத அபத்தமான சொல்லாயிற்றே' — என்று பேச முற்பட்டார்கள்.

''பிரிந்துபோகிற உரிமை — தனியரசு அமைத்துக் கொள்கிற உரிமை திராவிட இனத்திற்கு வேண்டுமென்று கேட்பது தவறு; அந்த உணர்ச்சியே தீதானது — என்று, முன்புதாங்கள் சொல்லி வந்த கொள்கைக்கு முரணாக, அந்தக் கொள்கைகளுக்குத் துரோகமிழைக்கும் வகையில் பேசுகிறார்கள்!

''இதை நான் இத்தனை விளக்கமாக எடுத்துச் சொல்வதற்குக் காரணம், இந்தக் கம்யூனிஸ்டுகள் கொள்கைக் குழப்பத்திற்கு ஆளாகியுள்ள இந்த விவகாரத்தில், நமது அடிப்படை இலட்சியம் சிக்கிக்கொண்டிருக்கிறது என்பதினால்தான்!

''இந்த ஒரு துறையில் மட்டுமல்ல — ஒரு பிரச்சினையில் மட்டுமல்ல — கம்யூனிஸ்டுகள் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவது!

— 11-ம் பக்கம் —

'அக்கா' என்றனர் ரஷ்யர்; அதையே உரைத்தனர் சிஷ்யர்!

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 3 ‖ 30—6—56 ‖ இதழ் 2

அந்தரங்கம்!

நல்லவை செய்வர் என்று நம்பினேம் !

நாடெல்லாம் இன்பம் பெருகும் என எதிர்பார்த்தோம் !

சொந்த ஆட்சி, சுதந்திர ஆட்சி என்ற சொக்குப்பொடியில் மயங்கி ஏமாந்தோம் !

—ஏமாற்று வித்தைகளை மூலதனமாகக் கொண்டு ஏற்றங் கொண்ட வாழ்வினரை எண்ணி மக்கள் இவ்வாறு பொறுமிக் கொண்டிருக்கும் நேரத்தில், செய்துவிட்ட கொடுமைகளுக்கெல்லாம் பிராயச்சித்தம் தேடிக்கொள்ளும் வகையில் காங்கிரசின் தலைமைப்பீடம் 'யோக்கியதாம்சங்கள்' என்ற தலைப்பில் ஒரு அறிக்கை விட்டிருக்கிறது.

பொதுமக்களே மன்னித்துவிடுங்கள் ! போன தேர்தலில் பொல்லாத மனிதர்களையும், போக்கற்ற 'சிலது'களையும் நிறுத்தி வைத்தமைக்கு மன்னித்துவிடுங்கள் ! இந்த முறை வடிகட்டிப் பார்த்து நிறுத்தி வைக்கப்போகிறேம். அத்தனைபேரும் இன்னின்ன யோக்கியதை பெற்றவர்கள்-என்று மக்களுக்குத் தெரியும் வகையில் மிகப் பெரிய அளவில் விளர்பரம் செய்திருக்கிறது காங்கிரசின் சந்நிதானம்.

காந்தியாரையும் மிஞ்சக்கூடிய ஒழுக்க சீலர்கள்தான் காங்கிரசின் பெயரால் தேர்தலுக்கு நிறுத்தப் படுவர் என்று அந்த யோக்கியதாம்ச அறிக்கை நமக்கு மறைமுகமாகத் தெரிவிக்கிறது. ஆனல் அந்த அறிக்கை மக்களை ஏமாற்றுவதற்கென, போலிக் கவுரவம் என்ற மூலாம்பூசி வெளியிடப்பட்டது என்பது நாடறிந்த உண்மை. அத்தகைய புடம் போட்டு எடுக்கப் பட்ட அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் யோக்கியர்கள் எத்தனைபேர் தலைமைபீடத்தில் இருக்கிருர்கள் ? யார் அவர்கள் ?-என்ற சந்தேகம் எழும்போதுதான் யோக்கியதாம்ச அறிக்கையின் மர்மம் புரிகிறது, என்ன அந்த மர்மம் ?

பண்டித ஜவகர்லால் நேரு வெளிநாடு சென்றிருக்கிருர். ஆண்டு போன ஆங்கில நாட்டு நண்பர்களைச் சந்திக்கப் போயிருக்கிருர். வெள்ளைப் புருக்களைப் பறக்கவிட்டு வெளிநாட்டில் தனக்கென ஒரு புகழைத் தேடிக்கொள்ளப் புறப் பட்டுப் போயிருக்கிருர். ஒருவார காலத்திற்கு முன்பே தன்னைப் பற்றியும், தான் சார்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியைப் பற்றியும் வெளிநாட்டில் பேசும்படியான ஒரு சூழ்நிலையை உருவாக்கிவிட்டு நேரு பயணப்பட்டிருக்கிருர். பண்டித நேரு வெளிநாட்டுக்கு எப்போது போனாலும் அதற்குமுன் ஒரு சிறு கீர்த்தியைத் தேடிவைத்துக் கொண்டுதான் போவது வழக்கம். அப்போதுதான் அங்கே தரப்படும் வரவேற்பில் புதிய தெம்பு, இன்ப ஒளி இருக்குமென்று அவர் நினைக்கிருர். உண்மையும் அதுதானே !

பன்னீரில் நீராடி பரவச வாழ்வு நடத்திய பண்டித நேரு வருகிருர்!

பணத்தைச் சூறையிட்டு, பங்களா வைத் திறந்துவிட்டுப் போராட்டம் நடத்திய பண்டித நேரு வருகிருர் ! ஆவடி நடத்தி அங்கே 'டிட்டோ' வைக் காட்டிய நேரு வருகிருர் !

புல்கானிங்கை இறக்குமதி செய்து பூமாலை சூட்டி மகிழ்வித்த நேரு வருகிருர் !

—இப்படியெல்லாம் வாழ்த்துப் பாடி, இநமருங்கும் சூழ்ந்துநின்று கடல்கடந்த நாட்டில் வரவேற்க வேண்டுமென்ற திட்டத்தில் அணுவும் தவருதிருக்கும் நேரு, இந்த முறை தனக்கு ஒரு புதிய புகழைத் தேடிக்கொள்ள வழிவகை செய்துவிட்டுத்தான் இலண்டனுக்குப் புறப் பட்டிருக்கிருர்.

புத்திசாலி நேரு.

புனிதமான இயக்கத்தை வளர்க்கும் நேரு

—என்று இந்த முறை நேருவைப் புகழாதிருக்கமாட்டார்கள் வெளிநாட்டில் ! ஏன் ? நேருவுக்கு முன் நேருவின் புகழைத் தென்ளுட்டு ஆங்கில ஏடுகள் மேலைநாடுகளுக்குத் தூக்கிச் சென்றுவிட்டன. தமிழ்த் தினசரிகளில் வெளிவந்திருப்பதைப் போலவே ஆங்கிலத் தின இதழ்களிலும் காங்கிரஸ் அபேட்சர்களுக்கு வேண்டிய யோக்கியதாம்சங்கள் வெளிவந்திருக்கின்றன. அந்த அறிக்கையை ஆங்கில நாட்டு ஈடன் வாசித்திருப்பார்; பண்டிதரின் அத்தியந்த நண்பர் மவுண்ட்பேட்டன் படித்திருப்பார்; ரோம் நாட்டுத் தலைவர்கள் படித்திருப்பார்கள் ! அவர்கள் என்ன நினைத்திருப்பார்கள் அறிக்கையைப் படித்து முடித்ததும் ?

"அடேயப்பா ! இப்பேர்ப்பட்ட ஒழுக்க சீலன்தான் இந்தியாவில் காங்கிரசின் பெயரால் நிற்க முடியுமா ? ஜவகர்லால் நேரு ஒழுக்கத்திற்கு எவ்வளவு கௌரவம் கொடுக்கிருர் ? நேரு உத்தமர் தான் ! ஒழுக்கசீலர்தான் ! உலகம் அவருக்குக் கௌரவம் காட்டுவது முறையானதுதான்"-என்று பேசாமல்-நினைக்காமல் இருக்கமாட்டார்கள். நேரு விரும்புவது அதுதானே ! நேர்த்தியான உடை உடுத்தி நாடெல்லாம் சுற்றிவந்து, தனது புறத்தூய்மையை நிலை நாட்டிக்கொண்டு வந்த ஜவகர்லால், தாம் அகத்தூய்மை கொண்டவருங்கூட என்பதை உலகறிய எண்ணி, ஆசைப்பட்டு இப்போது அந்த ஆவலையும் பூர்த்திசெய்து கொண்டார்.

யோக்கியதாம்ச அறிக்கை இரண்டு வழிகளில்துணைபுரிந்துநிற்கின்றது' மக்களிடம் மன்னிப்புக் கேட்கிறது. மலை, கடல் தாண்டிப் போயிருக்கும் பண்டிதருக்குப் புகழ் சேர்க்கிறது.

வேறு என்ன பயனைத் தரப் போகிறது அந்த யோக்கியதாம்ச அறிக்கை ? உள்ளபடியே, காங்கிரசின் பேரால் நல்ல உறுப்பினர்கள்தான் சட்டசபைக்குள் நுழைய வேண்டுமென்ற நல்லஎண்ணமோ, அல்லது சட்ட சபைக்குப் புத்திசாலிகள்தான் நுழைய வேண்டும் என்ற பெரு நோக்கோ காங்கிரசின் தலைமைப் பீடத்திற்கு இருக்குமாளுல், சர்வகட்சிக் கூட்டணி ஒரு அரசியல் முன்னணியாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று கூறுவார்களா ? கூறியிருக்கிருர்களே ! யோக்கியர்களைத் தேர்ந்தெடுக்கிருர்களாம் ! எத்தனை நாளைக்கு மந்திரத்தாலே மாங்காய் காய்க்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்க முடியும் ? விரித்துக் கிடக்கும் துண்டில் காசை வீசியெறிந்துவிட்டு வேடிக்கை பார்க்கக் காத்துக் கிடக்கும் மக்கள் எவ்வளவு நேரம்தான் நின்று கொண்டிருப்பார்கள் ! தட்டிக் கேட்கும் நேரம் நெருங்க நெருங்க அவர்களின் முகங்களில் கனல் தெறிக்கும் என்பதை கூத்தாடி மறந்துவிடக்கூடாது ! எந்தக் கூத்தாடி ? கோலேந்தியிருக்கும் டெல்லிக் கூத்தாடி !

கழகச் செய்திகள்

★ திருமழிசை தி.மு.கழகத்தின் சார்பில் 1-7-56 ஞாயிறு மாலை 6 மணிக்கு அறிஞர் அண்ணு, என். வி. நடராசன், சி. வி. எம். அண்ணுமலை, டி. சண்முகம் எம். எல். ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

★ குடந்தை தி. மு. க. சார்பில் 1-7-56 ல் ஞாயிறு மாலை கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்,

★ காரைக்குடி நகர தி. மு. க. சார்பில் 1-7-56 ஞாயிறு மாலை காந்தி சதுக்கத்தில் நாஞ்சில் மனோகரன், கண்ணதாசன், மு. வசனப்பித்தன் ஆகியோர் பேசுவர்.

கழகத் தோழர்களுக்கு ஆசைத்தம்பியின் அறிவிப்பு

தோழர் ஆஸ்சத்தம்பிக்குக் கடிதம் எழுதுவோர் கீழ்க்காணும் ஏதாவது ஒரு முகவரிக்குக் கடிதம் எழுத வேண்டப்படுகிருர்கள்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி
"தனி அரசு"
131. பிராட்வே, சென்னை-1:

(அல்லது)

ஏ. வி. பி. ஆசைத்தம்பி
"சம்பத் நிலையம்"
4. பி. பி. ரோடு
திருவல்லிக்கேணி, சென்னை 5.

பாண்டியன் நாடகமன்றம்

24-6-56 அன்று மாலை 5 மணிக்கு திருவல்லிக்கேணி, கே. எஸ். பாண்டியன் படிப்பகப் பணிமனையில் தோழர் எஸ். எஸ். தென்னரசு அவர்கள் தலைமையில் நடைபெற்ற

பாண்டியன் நாடகமன்றத் துவக்க விழாவில், மன்றத்தைத் துவக்கி வைத்து வளையாபதி முத்துக்கிருட்டிணன் அவர்களும், தோழர்கள் மா. பா. சாரதி, எம். கே. மணி, இ. மு. நெடுமாறன், இராசமாணிக்கம், எல். கோபால், கோ. தாமோதரன் பி. ஏ., "தென்றல் திரை" பத்பநாபன் ஆகியோர் "மன்ற"த்தைப் பாராட்டிப் பேசினர். தோழர் நெல்லை கபிலன் அவர்களின் நன்றி உரைக்குப்பின் கூட்டம் இனிது முடிவுற்றது.

திருமணம்

தஞ்சை மாவட்டம் வானராங்குடி திரு. பெரியசாமி மாவலியார் செல்வன் கனகராசனுக்கும், இளங்காடு திரு. தங்கப்பா சேதிராயர் செல்வி மீனுசுந்தரிக்கும், மணமகள் இல்லில் திரு. சுயம்பிரகாசம் பி. ஏ., பி. எல்., எம் எல். ஏ. அவர்களின் சீரிய தலைமையில் 18-6-56 ல் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. மணமக்களை வாழ்த்திப் பல நண்பர்களிடமிருந்து பரிசுகளும், வாழ்த்துக்களும் வந்திருந்தன.

மணவிழாவின் நினைவாக "தென்றல்" வளர்ச்சிக்கு ரூ. 1 வரப்பெற்றேம்.

அழுகையும் சிரிப்பும்

பேராசிரியர்—நா. பாண்டுரங்கன் M.A

அன்னையின் வயிற்றைவிட்டு மண்ணில் குதிக்கும் குங்கும நிறக் குழந்தையின் முதல் குரலில் முழக்கமிடும் அழுகையே! அந்த அழுகையைக் கேட்டதும் அதுவரை அழுது வேதனையுற்ற அன்னையின் முகத்தில் மின்னி ஒளிவிடும் சிரிப்பே!—உங்கள் இருவர்க்கும் இடையில்தான் மனிதவாழ்வே ஊஞ்சலாகி இடைவிடாது ஆடுகிறது!

கோழிமுட்டையின் வெள்ளைக் கருவில் மிதக்கும் மஞ்சள் கருவைப் போல் கீழ்வானத்தில் கதிரவன் மிதக்கத் தொடங்கியதும் வண்ணத்தாமரையில் கண்மலரும் சிரிப்பே!—அதுவரை மலர்ந்திருந்த ஆம்பல் மலரைக் கூம்பவைக்கும் அழுகையே!—உங்கள் இருவர்தம் ஆற்றலையும் எண்ணிப் பார்த்தால்......

அழுகையே! நீ மனத்தை
இயக்கத்தில் ஆழ்த்துகிறாய்!!
சிரிப்பே! நீ மனத்தை
மயக்கத்தில் வீழ்த்துகிறாய்!!

இதயத்தின் ஆற்றாமை உருவாக்கும் அழுகையே!—நீ கண்ணீராக உருவெடுக்கிறாய்—எல்லோருடைய விழிகளிலிருந்தும் வெளி வருகிறாய்!

ஏழையின் கன்னத்தில் வழியும் கண்ணீரே!—நீ மனித இனத்தின் அவமானச் சின்னம்!

வறுமையில் வாடும் பாட்டாளியின் கன்னத்தில் ஓடும் கண்ணீரே!—நீ மண்ணைப் போர்வையாக்கிக் கொண்டு தூங்கும் புரட்சி விதையின் மீது தேங்கும் தண்ணீர்!

இளம் விதவையின் கன்னத்தில் உலவும் கண்ணீரே!—நீ சமுதாயக் கொடுமையின் சரியான உருவம்!

வீரனின் கன்னத்தில் புரளும் கண்ணீரே! நீ உத்தம இதயம் பாடும் தித்திக்கும் இசை!

விவேகியின் கன்னத்தை நனைக்கும் கண்ணீரே!—நீ அறியாமையின் புன்சிரிப்பு!

வீணனின் கன்னத்தில் அருவியாகும் கண்ணீரே!—நீ நகைச்சுவையின் அருவி!

காதலியின் கன்னத்தில் தேங்கும் கண்ணீரே!—நீ காதலனின் நெஞ்சம் வாட்டும் செந்நீர்!

தமிழுக்காக அடக்குமுறையின் காயங்களை முதலில் தாங்கும் தமிழ்மகனின் நெஞ்சத்தில் துளிர்க்கும் கண்ணீரே—நீ தமிழன்னையின் பாதங்களில் தெளிக்கப்படும் பன்னீர்!...

தமிழுக்காகச் சிறையை ஏற்கும் சீலனின் கண்ணீரே!—நீ தமிழ்த் தாயின் நெற்றிக்குத் திலகம்!...

தமிழுக்காகச் சாவைக்கூடச் சந்திக்கச் செல்லும் தீரனின் கன்னத்தில் உள்ள கண்ணீரே!—நீ தமிழன்னை உவகையடைந்து மகனுக்கு உவந்தளித்த முத்தத்தின் எச்சில்!......

அறியாமை உருவாக்கும் சிரிப்பே!—நீ எண்ணங்கள் அரும்பாத—கண்ணைக்கூடத் திறக்காத குழந்தையின் முகத்தில் மலர்ந்து, எண்ணங்கள் அடங்கிப்போன முத்து நரை முதிர்ந்த மூதாளர் முகத்திலும் வளர்ந்து வருகிறாய்!

செவ்விதழைத் திறந்து அடுக்கிய முல்லை வரிசையை வெளிக்காட்டும் சிரிப்பே!—நீ உள்ளத்து மகிழ்ச்சியை எல்லோருக்கும் உணர்த்தும் புல்லாங்குழல் இசை! இன்பத்தைத் தரும் சிரிப்பே! நீ இனிமையைத் தரும் இசைதான். இசைவாணன் பாடும்போது உருகுகிறான். சுவைப்பவன் அந்தப் பாட்டைக் கேட்கும் போது உருகுகிறான். தோன்றும் இடத்திலும் தொடும் இடத்திலும் இனிய இசையைப் போலவே இன்பத்தைத் தருகிறது சிரிப்பு! எப்படி? மகிழ்ந்தவன் சிரிக்கிறான். அப்படிச் சிரிப்பவனைப் பார்ப்பவன் மகிழ்கிறான்!

சிரிப்பே! உன் வல்லமை சிறந்ததே!...நீ முகத்துக்கு அழகும் அகத்துக்கு இன்பமும் அளிக்கிறாய்! சிரிப்பே! நீ சேர்க்கும் அழகு, காட்சிக்கு விருந்து. மூடிய தாமரையில் அழுகை பாடுகிறது! சிரிக்கும் தாமரையிலோ உவகை கூத்தாடுகிறது!

சிரிப்பே! நீ இன்பக் காட்சியை வழங்குகிறாய். காலை நேரத்திலும் மாலை நேரத்திலும் கதிரவன் சிரிக்கும்போது கீழை வானத்திலும் மேலைவானத்திலும் மலர்ந்த ரோஜாச் சோலைகளோ, விரிந்த சிகப்புவண்ணச் சோலைகளோ வந்து நிறைகின்றன! அம்மட்டோ? அப்போது இயற்கையன்னை விரிக்கும் இன்பக் காட்சிகள் ஒன்றா இரண்டா? இலையணைகளில் நிற்கும் தாமரைகளைப் போலவே தலையணைகளில் முகம் வைத்து உறங்கும் மாந்தர்களின் விழிகளும் மலர்கின்றன. அதுமட்டுமா? வீட்டை விட்டு வேலைக்குப் புறப்படும் உழவர்களும் கூட்டைவிட்டுச் சோலைக்குப் பறந்திடும் பறவைகளும்!...இன்பக்காட்சிகள் ஒன்றா இரண்டா? மாலை நேரத்தில் கதிரவன் சிரிக்கும்போதும் இப்படி மனதை அள்ளும் காட்சிகள் மலரவே காண்கிறோம்! வேலையை விட்டு வீட்டுக்குப் புறப்படும் உழைப்பாளிகளும்—காலையில் விட்ட கூட்டுக்குப் பறந்திடும் பறவைகளும்...!

குழந்தையின் முகத்தில் கும்மாளமிடும் சிரிப்பே! நீ கொள்ளை இன்பத்தின் மலர்ச்சி!

குமரியின் கொவ்வை இதழ்களைத் திறக்கும் குறுநகையே!—நீ காதலனுக்குப் போதை—காவியக்காரனுக்கு ஓவியம்—ஓவியக்காரனுக்குக் காவியம்—சிற்பிக்குச் சிலையில் உளிசெதுக்கும் சித்திரம்—பெற்றோருக்குப் பெருங்கவலை—உற்றாருக்கும் மற்றோருக்கும் பேசுவதற்குப் பெருங்கதை!

பல்லுப்போன பாட்டியின் மைத் திறக்கும் சிரிப்பே!—நீ அப்போது நகைச்சுவையின் அறிவிப்பு!

இச்சகம் பேசுவோன் பல்லை வெளிக்காட்டும் சிரிப்பே—நீ அப்போது இழிவின் சின்னம்!

நயவஞ்சகனின் முகத்தில் நடமிடும் சிரிப்பே!—நீ அப்போது படம் விரிக்கும் நாகம்!

தொண்டனின் முகத்தில் மண்டும் சிரிப்பே!—நீ, அறம் அவனுக்களித்த பூச்செண்டு!

அறிஞரின் முகத்தில் செறியும் சிரிப்பே!—நீ அனைவர்க்கும் கற்கண்டு!

அழுகையே! நீ இருக்கும் இடத்தையும் சிரிப்பே! நீ இருக்கும் இடத்தையும் எண்ணிப் பார்த்தால்......

இரவு மலர்ந்ததும் மஞ்சத்தை நோக்கிக் கணவனுடன் நடக்கும் மங்கையின் கூந்தலில் உள்ள மலர்களோடு கொஞ்சுகிறது சிரிப்பு! காலை மலர்ந்ததும் அந்த மங்கையின் மஞ்சத்தில் சிதறிச் சிதைந்து கிடக்கும் மலர்களில் புதைந்து நிற்கிறது அழுகை!

இலையுதிர் காலத்தில் மொட்டையாக நிற்கும் மரங்களில் முறுவல் புரிகிறது அழுகை!

வசந்த காலத்தில் அந்த மரங்களில் புது நகை புரிகிறது சிரிப்பு!

வேகமாகச் செல்லும் கார் மேகம் நிமிர்ந்து நிற்கும் மலைச் சிகரத்தில் தலையை மோதிக் கொள்ளும்போது மழையாக மாறுகிறது அழுகை!

அந்த அழுகை அருவியாக ஓடி, சிற்றாறாகப் பெருகி, காடு மேடு கடந்து, நிலத்தில் நடந்து, வாய்க்கால்களில் பிரிந்து, வயல்களில் பாய்ந்ததும் பயிர்களாக உருவெடுக்கிறது சிரிப்பு!

ஆலமரத்தைச் சாய்க்கும் புயலில் ஓலமிடுகிறது அழுகை! அரும்போடு கொஞ்சும் தென்றலில் அறிவோடு நிற்கிறது சிரிப்பு!

கடலில் பெருகும் அலைகளில் நடனமிடுகிறது சிரிப்பு! அப்படிப் பெருகும் அலைகள் விடும் பெருமூச்சில் ஓசை கிளப்புகிறது அழுகை!

பௌர்ணமிக்குப் பிறகு உடல் தேயும் நிலவில் குடியேறுகிறது அழுகை! அமாவாசைக்குப் பிறகோ அந்த நிலவில் ஒவ்வொரு நாளும் சிந்து பாடுகிறது சிரிப்பு!

வேங்கையைப் பார்க்கும் மானின் உள்ளத்தில் ஓங்காரக் கூச்சலிடுகிறது அழுகை! அந்த வேங்கையின் உள்ளத்திலோ, தேங்கி வழிகிறது சிரிப்பு!

வாழைப்பழத்தோலை மிதித்து வழுக்கி விழுபவனின் நிலையில் வந்து நிற்கிறது அழுகை! அப்படி வழுக்கி விழுபவனைக் காண்பவர்களின் முகத்தில் வந்து மலர்கிறது சிரிப்பு!

குக்கலின் குரைப்பில் கழுதையின் குரலில் ஆந்தையின் அலறலில் தன் உருவத்தை உணர்த்துகிறது அழுகை!

குயிலின் பாட்டில் கிளியின் பேச்சில் சிட்டுக்குருவிகள் போடும் சத்தத்தில் தன் பயனை உணர்த்துகிறது சிரிப்பு!

இழப்பு உண்டாக்கும் அழுகையே!—உன்னுடைய சிறப்பையும்......இலாபம் உருவாக்கும் சிரிப்பே!—உன்னுடைய சிறப்பையும் எண்ணிப் பார்த்தால்...

கல்லின் சிரிப்பே நீதான் சிலை!
சொல்லின் சிரிப்பே நீதான் கவிதை!
அழகின் சிரிப்பே நீதான் கலை!
உடைந்த சிலையே நீதான் அழுகை!
உயிரற்ற கவிதையே நீதான் அழுகை!
அறிவூட்டாக் கலையே நீதான் அழுகை!

நடுங்கவைக்கும் இடியே!—நீ மேகத்தின் அழுகை! கண்ணைப் பறிக்கும் மின்னலே!—நீ மேகத்தின் சிரிப்பு! ஊடலே! நீதான் காதலின் அழுகை! கூடலே! நீதான் அந்தக் காதலின் சிரிப்பு!

சேரன் செங்குட்டுவனே! நீ தமிழ் வீரத்தின் வெற்றிச்சிரிப்பு! கனகவிசயர்களே! நீவிர் மானத்தின் அழுகை!

அழுகையே! நீ மனிதன் பிறந்ததும் தொடங்கி, இறந்ததும் அடங்கிவிடுகிறாய்! ஆனால்...சிரிப்பே! நீ அப்படியல்ல—பிறந்ததும் தொடங்கி இறந்ததும் அடங்கி விடுவதில்லை! இறந்தபிறகும் இருக்கிறாய்! மனிதனின் மண்டை ஓட்டைப் பாருங்கள்...அது ஓயாது ஒழியாது சிரித்துக்கொண்டே இருக்கிறது! ★



ஏகவாசகன்...

— 10-ம் பக்கத் தொடர்ச்சி —

குலோத்துங்கன் வெற்றிமுரசு கொட்டி மதுரைக்குள் நுழைந்தான். ஆனால் இங்கே தஞ்சை சீரழிந்தது. வேற்றகத்தைப் பிடித்த சோழனின் தாயகம் ரணகளமாகிக் கிடந்தது. அரண்மனையின் பெரும்பகுதி தகர்க்கப்பட்டது. அழிவு வேலையை மும்முரமாக நடத்தினான் மணவாளன்.

பாண்டியன் படை தோற்ற செய்தியும், மதுரையில் சோழன் புகுந்த செய்தியும் அவனுக்குத் தெரியாதாகையால் குலோத்துங்கன் தோற்றிருப்பான் எனக் கருதி, தான் யாரென்பதை வெளிக்காட்டிக்கொண்டே கலவரத்தை நடத்தினான் மணவாளன்.

அழிவுக்குள்ளான தஞ்சையில் இரண்டு உருவங்கள் அதிர்ச்சியோடு மணவாளனைக் கவனித்தன. இரண்டு உருவங்களும் மணவாளன் தங்கியிருந்த இடங்களை வேவு பார்த்தன.

அன்றிரவு......!

மணவாளன் தங்கியிருந்த காவிரிக்கரை மாளிகையில் வர்ண விளக்குகள் ஒளி வீசின. ஆட்டமும் பாட்டும் அமர்க்களப்பட்டது. வெறி மீறி நிலைகலங்கிக் கிடந்தது ஒரு கூட்டம். மணவாளன் மடியிலே புதுமுகம் ஒன்று சாய்ந்துகிடந்தது. அதே நேரத்தில் மாளிகையின் மேற்புறமும் கீழ்ப்புறமும் இரண்டு உருவங்கள் சுற்றிச் சுற்றி வந்தன. திடீரென மாளிகையின் விளக்குகள் அணைந்தன. பட படவென ஆட்கள் மோதும் சத்தம் கேட்டது. எல்லோரும் நிலைகுலைந்து ஓடினர். பலர் திசை தெரியாது ஓடிக் காவிரியில் விழுந்தனர். திடீரென்று ஒரு உருவம் மணவாளனைப் பிடித்து இழுத்துக்கொண்டு காவிரியின் மேல்கரைச் சோலைக்குள் நுழைந்தது. மணவாளன் திணறினான். திமிறினான். ஆனால் அந்த உருவத்தின் வலிவான பிடியிலிருந்து தப்ப முடியவில்லை.

' துரோகி ! உன்னைவிடமாட்டேன். உன் ரத்தத்தாலே சோழ மண்டலத்தைப் புனிதப்படுத்துவேன்"-என்று கூவியவாறு அந்த உருவம் வாளை ஓங்கிற்று.

"நில் !" என்ற சத்தத்தோடு ஓங்கிய கையைப் பிடித்தது மற்றொரு கை.

"யார் நீ ? கொலை புரிவதிலிருந்து என்னைத் தடுக்காதே ! துரோகிகளை இந்த நாட்டிலிருந்து ஒழிப்பதே என் முதற் கடன். என் தாயகம் காப்பாற்றப்பட வேண்டுமானால் இத்தகைய அக்ரமக்காரர்கள் ஒழிய வேண்டும்" என்று கூவிற்று முதலுருவம்.

இரண்டாவது உருவம் எவ்வளவோ தடுத்தும் முதலுருவம் கொலை புரியவே துணிந்தது. கடைசியில் வேறு வழியின்றி, தான் யார் என்பதைச் சொன்னாலாவது வீரன் வாளை உறையிலே போடுவானா பார்க்கலாமென்று தன்னை வெளிப்படுத்திக்கொண்டது இரண்டாவது உருவம். ஆம்; அதுதான் **ஏகவாசகன்**: துரோகம் புரிந்த மணவாளனின் உயிருக்கு அவன் மன்றாடினான்.

"இவன் துரோகிதான். ஆனால் என் தங்கையின் கணவன். என் தங்கைக்காக நான் தாலிப்பிச்சை கேட்கிறேன். விட்டுவிடு இவனை !" என்று கெஞ்சினான் ஏகவாசகன்.

"உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்தவர்களை உயிரோடு விடுவது தவறு" என்று கத்திற்று முதலுருவம்.

ஏகவாசகன் பதில் சொல்வதற்குள்ளாக அந்த உருவத்தின் வாள், மணவாளன் மார்பிலே பாய்ந்தது. ரத்தம் பீறிட்டு ஏகவாசகன் முகத்திலே தெறித்தது. ஏகவாசகன் கொதித்தான். அந்த உருவத்தைக் கையிலே பிடித்துக்கொண்டான். குற்றுயிராய்க் கிடந்த மணவாளன், ஏகவாசகன் கால்களைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதான். தன்னை மன்னித்துவிடும்படி க்கதறினான். சுந்தரத்தோகையைப் பற்றி அவன் மனதிலிருந்த களங்கமும் அப்போதே விலகிற்று. அவன் உயிரும் பறந்தது. ஆத்திரம் கொண்ட ஏகவாசகன் அந்த உருவத்தைக் கட்டியிழுத்துக்கொண்டு பைத்தியம் பிடித்தவன்போல நகருக்குள் ஓடினான். "என் அருமைத் தங்கையின் கணவனைக் கொன்ற சண்டாளன் ! என் உயிருக்கு உயிரான சகோதரியின் உடைமையை அழித்த சதிகாரன் !' என்று கூவிக்கொண்டே அந்த உருவத்தை அரச வீதி நடுத் தூணிலே கட்டினான்.

"கண்ணே தோகை, உன் மனம் என்ன பாடு படும் ? உன் கணவன் கொல்லப்பட்டு விட்டான். உன் கணவன் கொல்லப்பட்டுவிட்டான். ஐயோ! சகோதரி ! நீ எங்கே இருக்கிறாய் ? நீ எவ்வளவு துடிப்பாயோ ?" – என்று கதறினான் ஏகவாசகன்.

"அவள் துடிக்கமாட்டாள். ஏன் அழக்கூடமாட்டாள். ஆனந்தப்படுவாள். தாயகத்தைக் காப்பாற்றிவிட்ட பெருமைக்கு மகிழ்வாள். **தானே கணவனைக் கொன்றபின் ஏன் அவள் அழப்போகிறாள்**" என்று அமைதியாகப் பதிலிறுத்தது அந்த உருவம். ஆம்; அவள்தான் சுந்தரத்தோகை.

"தோகை !"-என்று கூவினான் ஏகவாசகன்.

"அண்ணா !"-என்று கதறினாள் சுந்தரத்தோகை.

பொழுது விடிந்தது.

மதுரையிலிருந்து வெற்றிமுழக்கத்தோடு திரும்பிய குலோத்துங்கன் களையிழந்த தஞ்சையையும் கணவனை இழந்த தன் மகளையும் அன்பு மனம் படைத்த ஏகவாசகனையும் கண்டான். தஞ்சைக்காகக் கண்ணீர்விட்டான். வாழ்விழந்த மகளுக்காக வருந்தினான். ஆனால் ஏகவாசகனை மீண்டும் பெற்றதால் இவை எல்லாவற்றையும் மறந்தான்.

மறுநாள் ! வெள்ளுடை தரித்த சுந்தரத்தோகை வீரவாள் எடுத்துக் கொடுத்தாள் ஏகவாசகனுக்கு. தஞ்சைத் தரணியைத் தன் தோள் வலியாலும், தங்கை தோகையைத் தன் மனவலியாலும், தமிழக மக்களைக் கருணையினாலும் காத்து வந்தான் ஏகவாசகன். இன்றைக்கும் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், மாவட்டங்களில் காணப்படும் கல்வெட்டுக்கள் மாவீரன் ஏகவாசகன் குலோத்துங்க சோழ வாணகோ வரையனின் புகழ்பாடுகின்றன. சுந்தரத்தோகையின் அண்ணனாக எண்ணப்படுவதே ஏகவாசகனுக்கு ஒரு பெரும் புகழில்லையா ! ★

"கலைக் கோயில்"

(மாதமிருமுறை கலை இலக்கிய இதழ்)

ஆசிரியர் : ரவி.

"கலைக் கோயில்" தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர் 15" x 10" அளவில் 32 பக்கங்களில் சுமார் 100 புகைப் படங்களுடனும், ராஜாஜி, அறிஞர் அண்ணா, இரா. நெடுஞ்செழியன், பெரியார், பசும்பொன் உ. முத்தராமலிங்கத் தேவர் முதலியோர்களின் ஒலிப் பதிவு செய்யப்பட்ட பேச்சுக்களுடனும் தமிழ்ச் சங்கப் பொன்விழாக் குழுத் துணைத் தலைவர் பேராசிரியர் ஆ. கார்மேகக் கோனார் அவர்களின் சிறப்புக் கட்டுரையுடனும் 1-7-56 அன்று வெளி வருகிறது.

தனிப் பிரதி விலை அணா 6.

விவரங்களுக்கு :

"கலைக் கோயில்"
27. சப்பாணி கோயில் தெரு,
வடக்குமாசி வீதி, மதுரை.

குறிப்பு :—விற்பனையாளர் இல்லாத பகுதிகளுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதவும். சாதாரண இதழ் விலை அணா 2.

உயர்தர மூங்கில்கள் ! **சிறந்த கீற்றுகள் !**

தி. மு. க.

2-வது மாநில மாநாட்டின் பெரிய கொட்டகைகளும், பந்தல்களும் போடுவதற்கான

எல்லாவகையான மூங்கில்களும் 2, 4, 6 அடி நீளமுள்ள கீற்றுகளும்

குறைந்த விலையில் விற்பனையாகி வருகிறது.
பெரும் வியாபாரிகளும் பயனடையலாம்.

கிடைக்குமிடம் :

எஸ். எஸ். பங்களா, சங்கரம் பிள்ளை ரோடு, திருச்சி - 2.

விரைவில் வெளி வருகிறது !

"முல்லை"

[இலக்கியத் திங்களிதழ்]

ஆசிரியர் : **கண்ணதாசன்**

விலை அணா எட்டு

◉

முல்லை
சென்னை - 6.

ஆசிரியர்

கண்ணதாசன்

எழுதும்

பாண்டிமாதேவி

அடுத்த இதழில் இடம் பெறும்

ஏகவாசகன் குலோத்துங்க சோழ வாணகோ வரையன்

கி. பி. 1178ல் தொடங்கிய மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியில் அறிவும் திறனும் மிக்க அரசியல் தலைவர்கள் பலர் இருந்தார்கள். குலோத்துங்கனது வெற்றிகள் பலவற்றிற்குக் காரணமான இவர்களில் மிக முக்கியமானவன் வாணர் மரபில் தோன்றிய ஏகவாசகன் **குலோத்துங்க சோழ வாணகோ வரையனாகும்**. கொங்கு நாட்டிலே பிறந்த இவன், சோழநாட்டின் தலைநகரிலேயே வசித்துவந்தான். மூன்றாம் குலோத்துங்கனுக்கு உற்ற துணையாகவும் உயிர்த்தோழனாகவும் இவன் இருந்தான். அந்த நாளில்தான் குலோத்துங்கன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த 'திருமுனைப்பாடி' நாட்டில் பல்லவர் குலத்தலைவன் ஒருவன் நாடு காவல் அதிகாரியாக இருந்தான். அவன் பெயர் **கூடல் ஏழிசை மோகன் மணவாளப் பெருமாள் வாணிலை கண்ட பெருமாளாகிய இராசராச காளவராயன்** என்பதாகும். சுருக்கமாக இவனை மணவாளப் பெருமாள் என்று அழைப்பார்கள். இந்த மணவாளப் பொருமாளிடம் குலோத்துங்க சோழன் அதிக அன்பு பாராட்டி வந்தான். குலோத்துங்கன் காலத்தில் பாண்டிய நாட்டில் அரசோச்சிய வீரபாண்டியன், சேரமன்னன் உதவியோடு, குலோத்துங்கனை நெட்டூரில் எதிர்த்தபோது இந்த மணவாளப் பெருமாள் குலோத்துங்கனுக்குப் பேருதவி புரிந்தான். அந்தப் போரில் குலோத்துங்கன் வெற்றி பெற்றான். அந்த வெற்றியின் காரணமாகத்தான் மணவாளப் பெருமாளுக்கு 'வாணிலை கண்ட பெருமாள்' என்ற பட்டத்தையும்சூட்டினான். நெட்டூர்ப் போர் நடந்த காலத்தில், திருமுனைப்பாடி நாட்டை இந்த மணவாளப் பெருமாளின் தந்தையாகிய **கூடலூர் அரச நாராயணன்** காத்து வந்ததால் மணவாளப் பெருமாளுக்குப் பொறுப்பு அதிகம் இல்லாதிருந்தது. அதனால் நெட்டூர்ப் போர் முடிந்ததும் மணவாளப் பெருமாள் தஞ்சையிலேயே தங்கிவிட்டான். குலோத்துங்கனது உயிருக்குயிரான நண்பனாகிய ஏகவாசகனும் அங்கேதான் தங்கியிருந்தான்.

குலோத்துங்க சோழன், மணவாளப் பெருமாளுக்குத் தன் பெண் மக்களில் ஒருவராகிய சுந்தரத் தோகையை மணமுடித்துக் கொடுத்தான். ஏகவாசகன் அரண்மனையிலேயே இருந்த காரணத்தால் சுந்தரத் தோகையைத் தன் தங்கையாகவே கருதி அன்பு செலுத்தி வந்தான். ஆனால் குலோத்துங்கன் அவளை மணவாளப் பெருமாளுக்கு மணமுடித்தபோது, ஏகவாசகன் துடித்தான். காரணம், மணவாளப் பெருமாளின் குணங்களை அவன் அறிந்திருந்தான். "பயங்கரமானதோர் நச்சுப்பாம்பு பளபளப்பாக மின்னுகிறது; அதைப் பார்த்து மயங்கிவிட்டாரே குலோத்துங்கன்" என்று எண்ணி யெண்ணி வாடினான்.

திருமணம் முடிந்த அன்று இரவு, சுந்தரத்தோகை தன் கணவனைச் சந்திக்கவேண்டிய நேரத்தில் அண்ணனைச் சந்தித்தாள். ஆம்! தந்தையிடம் மறுத்துரைக்க முடியாது திருமணத்துக்கு உடன்பட்ட அவள், திருமணம் முடிந்த அன்று இரவுதான் ஏகவாசகனைச் சந்திக்க முடிந்தது. ஏகவாசகன் தஞ்சை அரண்மனையின் தேன்நிலா மாடத்தில் தனியனாக அமர்ந்திருந்தான். கண் கலங்கி அமர்ந்திருந்த அவனைக் கதிகலங்கி வந்து சந்தித்தாள் சுந்தரத் தோகை. அவனைப் பார்த்ததும் கோழை போல் கண்ணீர் வடித்தான் ஏகவாசகன். அவளது எதிர்காலம் பயங்கர உருவம் கொண்டிருப்பதாகவே அவனுக்குப் பட்டது. என்றாலும் சிறிது நேரத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டு தோகைக்கு ஆறுதல் கூறினான். "எந்த நேரத்தில் உனக்கு எது நேர்ந்தாலும் ஒரு ஆளிடம் சொல்லி அனுப்பு; பறந்து வருகிறேன் அங்கே" என்றான் ஏகவாசகன். இந்தக் கடைசி வரியைக் கேட்டபடியே தேன் நிலா மாடத்தில் புகுந்தான் மணவாளப் பெருமாள். அவன் உள்ளத்திலே சந்தேகம் கொழுந்துவிட்டது. ஏகவாசகனிடம் ஏற்கனவே அவனுக்கிருந்த பொறாமை, இப்போது பல மடங்கு வளர்ந்தது.

கண்ணதாசன்

இன்பவாழ்வு தொடங்கிய முதல் நாளிலேயே துன்ப வாழ்வுக்குக் கடைக்கால்ஊன்றப் பட்டது. சற்றுத் தூரத்திலேயே மறைந்து நின்ற மணவாளப் பெருமாள் அந்த நிலவொளியில் ஏகவாசகனும் சுந்தரத் தோகையும் அருகருகே நிற்பதைக் கண்டான். அவர்கள் பேசுவது அவன் காதிலே தெளிவாக விழுந்தது. இறுதியில், சுந்தரத் தோகை ஏகவாசகன் தோளிலே சாய்ந்தபோது அது 'காதல்' என்றே முடிவு கட்டினான் மணவாளன். வற்றாத பாசத்திலே தங்கை அண்ணன் மார்பிலே சாய்வது உண்டு. ஆனால், அது மணவாளனுக்குத் தெரியாது. அவன் ரத்தம் கொதித்தது. அவர்கள் அருகிலேயே போய்விட்டான். திடீரென்று அவனை அங்கே கண்ட ஏகவாசகன் திகைத்தான். சுந்தரத் தோகையும் தன் நிலைஅறிந்து விலகினாள். அவள் முகம் கறுத்தது. கண்டதைக் கொண்டு மணவாளன் கணக்கைத் தவறாகப் போட்டிருப்பானோ என்று அஞ்சினாள். மணவாளன், ஏகவாசகனிடம் ஒன்றும் பேசாமல் சுந்தரத் தோகையைப் பார்த்து 'நட' என்றான். தோகை தலை குனிந்து மாடத்தை விட்டுக் கீழே இறங்கினாள். அவள் பின்னாலேயே கீழே இறங்கி வந்தான் மணவாளன். அவர்கள் இருவரையும் எதிர்கொண்டான் குலோத்துங்கன். 'யாருக்கும் சொல்லாமலே தேன்நிலா மாடத்திற்குப் போய்வந்திருக்கிறார்களே' என்று எண்ண மிட்டபடி அவன் சிரித்தான். தோகை தலைகுனிந்து அந்தப்புரத்துக்குச் சென்றுவிட்டாள். மணவாளன் கடுவன் பூனைமாதிரி குலோத்துங்கன் எதிரே நின்றுகொண்டிருந்தான்.

"இன்று உங்கள் வாழ்விலே முதல்நாள். ஏன் இப்படி இருக்கிறாய் மணவாளா?" என்று கேட்டான் குலோத்துங்கன். மணவாளன் தலைநிமிர்ந்தான். தொண்டையைக் கனைத்துக் கொண்டான். சுற்றுமுற்றும் பார்த்தான். சொன்னான்: "உங்களிடம் மிக முக்கியமான செய்தியொன்றைச் சொல்லவேண்டும். சாதாரண நாடு காவல் அதிகாரியாகிய எனக்கு, உங்கள் குமாரியைத்திருமணம்செய்துவைத்தீர்கள். கிடைக்காத பேறு கிடைத்தது என்று நான் பெருமைப்பட்டேன். ஆனால், அரசகுலப் பெருமைக்கு இழுக்குத் தரக்கூடிய ஒரு நாடகத்தை இப்போது கண்டேன். சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்! ஆனால் மணமுடித்த முதல் நாளிலேயே இதைச் சொல்லுகிறேன் என்பதால் நீங்கள் நிச்சயமாக நம்பலாம். சற்று நேரத்திற்கு முன்பு தேன்நிலா மாடத்தில் நான் கண்ட கோரமான காட்சி,.........! என் மனம் நடுங்குகிறது. பொன்னி வளநாடற்குத் தீராத மாசு! சோழ வரலாறு கண்டறியாத களங்கம்! ஆம்! சுந்தரத் தோகை இன்னொருவன் மார்பிலே சாய்ந்திருந்தாள்." குலோத்துங்கன் குதித்தான். "யார் அந்த இன்னொருவன்" என்று உறுமினான்.

"யார்? யாராக இருக்கமுடியும்! அருகிலேயே வைத்து அன்னம் ஊட்டி வளர்த்தீர்களே! அண்ணன்போலப் பழகுகிறான் தோகையிடம் என்று நினைத்தீர்களே! அவன்தான், ஏகவாசகன்!" என்று அலட்சியமாகக் கூறினான் மணவாளன். குலோத்துங்கனின் ரத்தம் கொதித்தது. "எங்கே அவன்?" என்று கேட்டான். தலைநிமிர்ந்து பார்த்தான். எதிரே ஏகவாசகனே நின்றுகொண்டிருந்தான். மாடத்திலிருந்து அப்போதுதான் இறங்கிவந்திருந்தான் அவன்.

— 10-ம் பக்கம் —

3

அந்தப் பரோபகாரி வந்ததற்காக நான் மகிழ்ந்தேன் என்றாலும், நடுக்கதவைத் திறந்து வருவானேன் என்று நடுங்கினேன். ஓரத்திலே சற்று ஒதுங்கி நின்று, 'நமஸ்காரம்' என்றேன். அவர் பதில் பேசாது கட்டிலில் உட்கார்ந்து, 'கதவைச் சாத்து! யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்?' என்றார். நான் ஒன்றும் புரியாமல் கதவைச் சாத்தினேன். ஆடவர்கள் கதவைச் சாத்தச் சொல்வதிலே எனக்கு அனுபவம் இல்லாவிட்டாலும், ஏன் சாத்தச் சொல்வார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் சூடாமணியை அப்படி நினைக்க நான் தயாராயில்லை. கூட்டத்தில் பேசும்போது அவர் தலையிலே போட்டுக் கொள்ளுகிற குல்லாய் போலவே அவர் மனமும் வெள்ளையாக இருக்கும் என்று நான் நம்பினேன். முழு உலகத்தின் துன்பங்களையும் கண்டு உருகுகிற ஒருவர், தனி ஒரு பெண்ணிடம் தவறாக நடப்பார் என்று நம்பமுடியுமா? அவதிப்படுகிற உலகத்தில் நானும் ஒருத்தி தானே! என்னைத் தனியாகக் கடைத்தேற்றுவதற்குத்தான் கதவைச் சாத்தச் சொல்லுகிறார் போலும் என்று எண்ணி உடனே கதவைச் சாத்தினேன். எதிர்த்த கட்டிலைக் காட்டி 'உட்கார்' என்றார். நான் உட்கார்ந்தேன். 'உன்னைப் பற்றி வேலையா எல்லாம் சொன்னார்' என்று ஆரம்பித்தார். நான் அடிக்கடி தலையைக் குனிந்தும் நிமிர்ந்தும் அவர் பேசுவதை ஆவலுடன் கேட்டேன். என்னை வெகுவாகப் புகழ்ந்தார். என் மெய்சிலிர்த்தது. இருக்காதா பின்னே? பெரிய பெரிய வீரர்களைக்கூட மயங்க வைக்கும் புகழ்ச்சி, சாதாரணப் பெண்ணாகிய என்னை மயங்க வைத்ததில் ஆச்சரியம் இல்லை! ஆனால் புகழுகிற முறையை அவர் கலையாகக் கற்றுவைத்திருந்தார். 'இனிமேல் நீ எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை' என்று ஆறுதலும் கூறினார். நான் ஏன் கவலைப்படப் போகிறேன்?

சூடாமணி மாதிரியும் வேலையா மாதிரியும் நல்ல மனம் படைத்தவர்கள் எனக்குக் கை கொடுக்கத் துணிந்துவிட்டபின் எனக்கேது கவலை? நான் மிகுந்த நன்றியறிதலோடு அவர் முகத்தைப் பார்த்தேன். அவர் இடைவிடாமல் என்னைப் பார்த்தபடி புன்னகை புரிந்தார். அந்தப் புன்னகையில் எனக்கொன்றும் காதல் பிறந்துவிடவில்லை. ஆனால், அந்தப் புன்னகையின் மூலம் என்னைக் கவர்ந்துவிட முடியுமென்று அவர் நம்பினாரோ என்னவோ, எனக்குத் தெரியாது. திடீரென்று தன் பக்கத்திலே கையைக் காட்டி 'இப்படி வா' என்றார். கிளிகளையும் கோழிகளையும் கூப்பிடுகிற மாதிரி எவ்வளவு சீக்கிரம் ஆடவர்கள் பெண்களைக் கூப்பிட்டுவிடுகிறார்கள்? பெண்களுக்கு அது என்ன சாதாரண காரியமா? கன்னி கழியாத பெண் நெருப்பின் அருகிலே நெருங்கலாம். ஆனால் நச்சுப் பார்வை பார்க்கும் ஆண்களின் அருகிலே நெருங்குவது கூடாது. ஆம்! சூடாமணியை நான் சந்தேகிக்க ஆரம்பித்தேன். அதனால் அவர் அருகிலே போகாமல், 'இருக்கட்டும் பரவாயில்லை; இங்கேயே இருக்கிறேன்' என்றேன். ஆனால் நான் சற்றும் எதிர்பாராத வகையில் திடீரென எழுந்து என் அருகில் வந்து அமர்ந்தார். நான் எழுந்து நின்றுகொண்டேன். அவரை நான் புரிந்துகொண்டுவிட்டேன். 'உங்கள் தகுதிக்கு இது அழகல்ல' என்றேன். 'காதலுக்குத் தகுதி ஒரு கணக்கல்ல' என்றார். 'இதற்குத்தானா பரிவு காட்டினீர்கள்?' என்று கேட்டேன். 'சேச்சே! பரிவு வேறு, பாசம் வேறு!' என்று விளக்கம் தந்தார். 'கண்டவுடனேயே கட்டிப்பிடிக்க வருவதுதான் பாசமா' என்று கேட்டேன். 'இது முதிர்ந்த பாசம்' என்றார். அவரை நான் அலட்சியமாகப் பார்த்தேன்.

'கேள்! நான் பிரம்மச்சாரிதான்! ஆரம்பத்தில் நான் கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும்போதே உன்னைக் கண்டேன். பேசி முடித்து, காரில் போகும்போது, வேலையாவிடம் உன்னைப் பற்றிய விவரங்களை விசாரித்தேன். நாடகக் கம்பெனியில் சேர்க்கலாம் என்றுதான் உன்னைக் கூட்டிவரச் சொன்னேன். ஆனால், இப்போது, என் மனைவியாகவே ஆக்கிக்கொள்ள முடிவு செய்துவிட்டேன்' என்றார். நான் தலைகுனிந்தேன். கல்யாணம், மனைவி என்கின்ற வார்த்தைகளைக் கேட்டால் மட்டும் இந்த நாட்டுப் பெண்களுக்கு வெட்கம் வந்துவிடும். எனக்கு வந்ததும் வெட்கம்தான். அந்தச் சூழ்நிலையிலே - அவருக்கும் எனக்கும் உறவில்லாத நிலையிலேகூட அவரைப் பார்க்கமுடியாமல் வெட்கம் என்னை ஆட்கொண்டது. என் நிலையைப் பார்த்ததும், அவர் உறுதிமொழிகளை அள்ளி இறைக்க ஆரம்பித்தார். மேடைப்பேச்சைக் காட்டிலும் வேகமாக வந்தது பேச்சு. நெருப்பு அருகிலே மெழுகு எவ்வளவுநேரம்தான் உருகாமல் இருக்கும்? நான் உருகினேன். சூடாமணி என் கணவரானால்... ......?-அதை நினைக்கும்போதே என் மனம் மகிழ்ந்தது. ஓரக் கண்ணால் அவர் முகத்தைப் பார்த்தேன். அதற்குமேல் அவர் பேசவில்லை. கையைப் பிடித்தார். நான் பறித்துக்கொள்வது போலப் பிடிப்பை இறுக்கிக்கொண்டேன். என் கையில் இருந்த கண்ணாடி வளையல்களை மேற்புறமாக ஒதுக்கினார். 'பளிங்குபோல் இருக்கிறது கை' என்றார். 'கை மட்டும்தானா' என்று கேட்டேன். 'இல்லை! முகமும்கூட' என்றார். நான் இதயத்தைப் பற்றி நினைத்தேன். அவர் உருவத்தைப் பற்றிப் பேசினார். அவருக்கு அதுதான் தேவை என்பதை நான் அப்போது எப்படி உணரமுடியும்?

நான் இளகிவிட்டேன் என்பதை நன்றாக அறிந்துகொண்ட அவர், என்னை அருகிலே உட்காரவைத்துக்கொண்டார். அப்போதும் என் கைமேல் அடித்து, 'நீயே என் மனைவி' என்று உறுதி கூறினார். அதற்குமேல் நான் எதை மறுக்கமுடியும்? அவர் என்னைத் தொட்டார். ஆடவர் தீண்டியறியாத என் அங்கங்களை அவர் அணு அணுவாக ரசித்தார். தோளிலே கை வைத்து என் முகத்தைத் தன் மார்பிலே சாய்த்துக்கொண்டார். இந்த உலகையே மறந்தவர் போல் காணப்பட்டார். அவர் மேனி சற்றுச் சூடாக இருந்தது.

'உடம்பு ஏன் கொதிக்கிறது?' என்று வற்றாத அன்போடு கேட்டேன். அவர் உடல் நிலையில் நான் அக்கறை செலுத்த ஆரம்பித்தேன். அவர் என் கணவர் அல்லவா?

'ஒன்றுமில்லை! உன்னை முதன் முதலாக அணைத்துக்கொள்ளுகிறேன் அல்லவா, அந்த மயக்கம்!' என்றார். என் முகத்தை நிமிர்த்தினார். அவர் என் இதழில் படர்ந்தார். நான் இசைந்தேன். மேடையிலே வீரம் முழக்கிய அவரது இதழ்களை நானும்கூடத்தான் விரும்பினேன். என்ன தப்பு? அவர்தான் என்னை மணமுடிக்கப் போவதாகச் சொல்லிவிட்டாரே!

என்னைக் கட்டிலில் சாய்த்தபடி அருகிலேயே உட்கார்ந்து

இருந்த அவர் அந்த நேரத்திலேயே கணவனும் மனைவியும் ஆகிவிட விரும்பினார். நாலுபேர் முன்னிலையில் மணமுடித்துக் கொள்ளாமல் ரகசியமாக உடலுறவு கொள்ளுவது எவ்வளவு பெரிய தவறு என்பதை நான் அவருக்கு எடுத்துச் சொன்னேன். ஆயிரம் பேருக்கு விளக்கஞ் சொல்லி ஒப்புக் கொள்ள வைக்கிற அவருக்கு என்னை ஒப்புக் கொள்ள வைக்கும் வித்தையா தெரியாது? பேச்சிலேயே என்னை மடக்கிவிட்டார். ஆம்! முதல் சந்திப்பிலேயே என்னை அவர் உணவாக்கிக் கொண்டார். நான் நாடகக் கம்பெனி பற்றிய சிரத்தையை இழந்துவிட்டேன். அவருடைய மனைவியாகிவிட்டோம்; அது போதும் என்கிற உணர்ச்சியே மேலோங்கி நின்றது.

என் அறைக் கதவு தட்டும் சத்தம் கேட்டது. படபடவென அவர் எழுந்து நடுக்கதவைத் திறந்து தன் அறைக்குப் போய் விட்டார். நான் என்னைச் சரிப்படுத்திக் கொண்டு கதவைத் திறந்தேன். என் தாய் உள்ளே வந்தாள். 'நாடகக் கம்பெனியில் ஒப்பந்தம் ஆகிவிட்டது' என்று பெருமையோடு கூறினாள். நான் அதைச் சாதாரணமாக வாங்கிக் கொண்டேன்.

'இதென்ன பிரமாதம்! இதை விடப் பெரிய ஒப்பந்தம் இங்கு ஆகிவிட்டது' என்று கூறவில்லை! நினைத்துக் கொண்டேன். என் முகத்தைத் தொட்டுக் கண்ணேறு கழித்தாள் அவள். அதற்கு முன்னாலேதான் என் முழு உடலுக்கும் கண்ணேறு கழித்துவிட்டாரே சூடாமணி! நான் அவளைப் பார்த்துச் சிரித்தேன். சூடாமணியால் காயப்படுத்தப்பட்டிருந்த என் அதரங்கள் இன்பத்தோடு வலித்தன. தாளாத வறுமையிலே கிடந்த எங்கள் வாழ்வு திடீரென்று எவ்வளவு உயரத்தில் தூக்கி நிறுத்தப்பட்டுவிட்டது? இதைத்தான் அதிருஷ்டம் என்கிறார்கள் போலும்! ஆனால், வந்த அதிருஷ்டத்துக்கு எவ்வளவு நீண்ட சோகமயமான வால் உள்ளது என்பதை நான் காணவில்லை.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் சூடாமணி ஒரு புதிய செய்தியைச் சொல்லி அனுப்பினார். 'நாளைக்குச் சென்னைக்குப் புறப்படுகிறோம்' என்பதுதான் அது. 'ஏன் புறப்படுகிறோம்?' என்று கேட்டாள் என் தாய். அவளுக்கு என்ன தெரியும்! சில பேர் சில இடங்களுக்குப் புறப்படுவதற்கான காரணம், அவர்கள் அந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்த பின்னரே தெரிவதுண்டு. பிரயாணத்திற்குக் கூடவா மனிதன் லட்சியத்தைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்க முடியும்? ஆனால், சூடாமணியின் பிரயாணத்திலே ஒரு லட்சியம் இருப்பது எனக்கு மட்டும் தெரியும். ஏனென்றால் அந்த லட்சியமே நான் தானே!

சென்னைதான் சூடாமணியின் சொந்த ஊர். அங்கே அவருக்கு நாலைந்து வீடுகள் சொந்தமாக உள்ளன என்று என்னிடம் சொன்னார். அங்கே கொண்டு போய் என்னைக் குடிவைத்து விடுவதற்காகத்தான் புறப்படச் சொல்கிறார்! இதை நான் தாயிடம் சொல்லவில்லை. "புறப்படச் சொல்கிறார். புறப்படுவோம்! என்ன செய்வது, எப்படிச் செய்வது என்பதெல்லாம் அவருக்குத் தெரியும்!", என்று, நான் தாயிடம் கூறினேன். 'ஒருவேளை நாடகக் கம்பெனி சென்னைக்குப் போகலாம்' என்று அவள் தன்னைச் சமாதானம் செய்துகொண்டாள்.

மறுநாள் சென்னை வந்து சேர்ந்தோம். எப்படி வந்தோம்? ரயிலில் முதல் வகுப்புப் பெட்டியில் நாங்கள் மூவர் மட்டுமே அமர்ந்து வந்தோம். வழிநெடுக, நானும் அவரும் எங்கள் கதையை, என் தாய்க்குமுன் விரித்துவைத்தோம். முதலில் திடுக்கிட்ட அவள், என்னுடைய உறுதியைப் பார்த்து சமாதானமடைந்தாள். பிறகு அவள் தூங்கிவிட்டாள். நாங்கள் மட்டும் தூங்காமல் பேசிக்கொண்டே வந்தோம். அந்தநாளை இன்று நினைத்தாலும், என் மனம் கூத்தாடுகிறது.

சென்னையிலே தனிக்குடித்தனம் அமைத்தார். வசதிகள் செய்துகொடுத்தார். ஆனாலும் மாலை ஆறு மணிக்கு வந்து காலை ஆறு மணிக்குத் திரும்பிவிடுகிற நிலையில்தான் என்னோடு அவர் வாழ்ந்தார். அதிகம் சொல்வானேன்! மாதங்கள் கடந்தன. என் தாய், மரணத்தின் பிடியிலே சிக்கினாள். நான் தவித்தேன்; துடித்தேன். அப்போது ஆறுதல் சொன்ன சூடாமணி, அடுத்த நாளே அலட்சியப்படுத்தத் துவங்கினார். ஏன்? நான் கர்ப்பிணி! மாலையிட்ட மனைவி, கர்ப்பிணியானாலே மன வேதனைப் படுவார்களாமே ஆடவர்கள்! மாலையிடாத நான் கர்ப்பிணியானால், மகிழவா செய்வார், சூடாமணி! என் வயிறு வளர வளர என் வாழ்வு தளர ஆரம்பித்தது. காதல் வந்த அதே வாய் வழியாக வசை வர ஆரம்பித்தது. நான் அதையெல்லாம் சகித்துக்கொண்டேன். "கணவன் மனைவி என்றிருந்தால் அப்படித்தான் இருக்கும்" என்று ஆறுதல் செய்துகொண்டேன். ஆனால் கணவன் மனைவி தகராறாக இதை அவர் கருதவில்லை. அனாதைப் பிண்டத்தை அனுவசியமாகச் சுமக்க நேர்ந்தவர்போல் சங்கடப்பட்டுத் திட்டினார். நான் என்ன செய்வேன்? யார் எனக்குத் துணை! அவர் கால்களைப் பிடித்துக் கெஞ்சினேன். "உங்களைத் தவிர எனக்கு வேறு யார்? ஏன் என்னை வேதனைப்படுத்துகிறீர்கள்!" என்று அழுதேன். பணக்காரப் பெண்கள் கண்ணீர் விட்டால் அந்தக் கண்ணீரின் ஒவ்வொரு துளியும் வைரமாக மாறுமாம். நான் ஏழை; என் கண்ணீரின் ஒவ்வொரு துளியும் கடலில் வீழ்ந்த மழைத்துளியாயிற்று! அவர் பேசாமல் எழுந்து போய்விட்டார்.

அன்று.........

இரண்டு நாட்களாக அவர் வரவில்லையே என்று ஏங்கித் தவித்த எனக்கு திடீரென்று ஒரு செய்தி வந்தது. சூடாமணிக்குத் திருமணமாம்! திருமணம்! என் மூச்சு நின்று மீண்டது!

"திருமணமா? ஏன்?"

"மனிதனுக்கு ஒரு மனைவி வேண்டாமா? அதற்காக!"

"மனைவியா! அப்படியானால், நான்?"

"அட முட்டாளே! நீ, எடுப்புச்சாப்பாடு. மனைவி என்பவள், முறையாக வருபவள்"

"ஆம்! நான் முட்டாள்தான்! முறை தவறி வந்து அவதிப்படும் நான், முட்டாள்தான்!"

—இப்படி என் மனம் இரு பிரிவாகப் பிரிந்து கேள்வி பதிலாகக் கதறிற்று. முட்டி மோதிக்கொண்டு அழுதேன். பிறகு, துணிந்து, சூடாமணியின் வீட்டை விசாரித்துக்கொண்டு அங்கு சென்றேன். வாசலிலே அவரது தந்தை உட்கார்ந்திருந்தார். "சூடாமணி இருக்கிறாரா!" என்றேன்.

"ஏன்?" என்று கேட்டார் அவர்.

"பார்க்கவேண்டும்!"

"என்ன சேதி?"

—நான் துணிந்தேன். "அவர் என் கணவர்!" என்றேன்!

அவர் திடுக்கிட்டார். ஆனால், பாவம், அவர் நல்லவர். சட்டென்று புரிந்து கொண்டார். மெதுவாக என்னை உள்ளே அழைத்துச்சென்று விசாரித்தார். முழு விபரத்தையும் சொன்னேன். அவர் கண் கலங்கினார்.

"அம்மா, ஆரம்பத்திலேயே இதை நான் அறிந்திருந்தால், உன்னையே அவனுக்கு மணமுடித்து வைத்திருப்பேன். இப்போது நீ கர்ப்பிணி. மணமுடித்தால்கூட ஊர்ப்பழிக்குத் தப்ப முடியாது. எங்கள் குடும்ப கவுரவம் பாழ்பட்டுவிடும். உன்னை மன்றாடுகிறேன். பணம் தருகிறேன். எங்காவது போய் விடு. திருமணம் முடிந்தபின் உன்னையும் அழைத்துவந்து, மருமகளை எப்படியாவது சமாதானப்படுத்தி, கூட வைத்துக் கொள்ளச் செய்கிறேன்" என்றார். என் கால்களையே பிடித்துவிட்டார் அவ்வளவு பெரியவர்...என் கால்களைப் பிடித்ததும் என் இக்கட்டான நிலையை எண்ணிக் கதறி அழுதுவிட்டேன். என் துன்பத்திற்கு யாரும் இரங்கவில்லை. ஆனால், அவரது துன்பத்திற்கு நான் இரங்கினேன். நான் பெண்ணல்லவா? அவர் கொடுத்த பணத்தைப் பெற்றுக் கொண்டு வெளியேறினேன். கால்போன திக்கிலே நடந்தேன். நிறை கர்ப்பம்; கால்கள் தள்ளாடின.

ஒரு தெருவின் திருப்பத்தில் வந்ததும் மயங்கிவிழுந்தேன்.

பிறகு நான் கண்விழித்துப் பார்த்தபோது, அழகான ஒரு மாளிகையில் படுத்திருந்தேன். ஒரு இளம்பெண் எனக்குப்பணிவிடை செய்துகொண்டிருந்தாள். அவளை விசாரித்ததில், நான் மயங்கி விழுந்தபோது அவள், காரில் வந்துகொண்டிருந்தாளாம். என்னைப் பார்த்து, காரை நிறுத்தி எடுத்து வந்தாளாம். என்னை அவள் விசாரித்தாள். நான் எதையும் சொல்ல மறுத்தேன். கடைசியில், அவள் காட்டிய பரிவின்மூலம், என் வாய் தானாக உண்மைகளைக் கூறத் தொடங்கிற்று. நான் எச்சரிக்கையாக, அவர் பெயரைச் சொல்லாமல் "ஒருவர், ஒருவர்" என்றே சொல்லி வந்தேன். ஆனால், அவளது குறுக்குக் கேள்விகள் அவரது பெயரைச் சொல்லவேண்டிய சூழ்நிலையில் என்னைத் தள்ளின.

"பெயர் சூடாமணி; காங்கிரஸ் தியாகி" என்றேன்.

அவள் துள்ளிக்குதித்தாள்.

"ஆ!" என்றாள்.

"என்ன?" என்று கேட்டேன்.

அவள்தான் அவருக்குப் பேசி முடிக்கப்பட்ட மணப்பெண்ணாம்!

தொடரும்

பேசத் தெரியாதவர்கள்,-பேசுவதற்கு அவசிய மில்லாதவர்கள் பேசாதிருந்தால் அரசியலில் ஓரளவு குழப்பங்களில்லாதிருக்குமென்பார்கள். ஆனால் தென்னாட்டு அரசியலில் ஊமைகளும் உளறுவாயர்களும்தான் உச்சிக்கிளையில் இருக்கிறார்கள்.

கௌரவத்தின் பெயரால், குடும்ப அந்தஸ்தின் பெயரால் உயர்பதவி கொடுக்கும் முறையொன்றை வெள்ளையன் தனக்கென ஒரு வழியாக வகுத்துக்கொண்டான். அந்த வழி காங்கிரஸ்காரர்களைப் பல இடங்களில் மூக்கறுப்பு விழா நடத்திவிட்டது. தகுதியைக் காட்டிலும், திறமையைக் காட்டிலும், அந்தஸ்திலே ஊறிப்போனவர்கள் மந்திரி பதவியில் இருக்க வேண்டுமென்று வெள்ளையர்கள் எண்ணியதற்குக் காரணம், டாம்பீகத்திலும் மிரட்டலிலும் காலத்தை உருட்டவேண்டியவர்களாக இருந்தார்கள். காரணம், அவர்கள் அந்நியர்கள். உள்நாட்டின் பெரும்புள்ளிகள் பதவியிலிருந்தால் தங்களுடைய சிங்காதனத்திற்கு உறுதி அதிகம் என்று எண்ணினார்கள், அவர்கள் வெளிநாட்டுக்காரர்கள் அவ்வாறு செய்தார்கள்; இந்த 'சுயராஜ்யக்காரர்கள்' ஏன் அந்த வழியைப் பின்பற்றவேண்டும்? ஒரு சுதந்திர அரசியல் மந்திரிபதவி யேற்போர் புத்திசாலிகளாக இருக்கவேண்டுமே தவிர 'ஸீத்தியோ, கித்தாப்போ, ஐபர்தஸ்தோ கொண்டவர்களல்லவே!

இராமனுதபுரம் ராஜா சேதுபதி அவர்கள் வெள்ளையர் வழிப்படி மந்திரியானார். 'ராஜா மந்திரியானார்'-என்று பத்திரிகைகளெல்லாம் எழுதின. ஆச்சாரியாரின் அதி அற்புத மேதா விலாசத்தையும் புகழ்ந்தன. நாட்கள் உருண்டன. 'நமது ராஜா' நாக்கில்லாப் பிராணி போல, பள்ளிக்குச் செல்லும் பாலரென பணம் பெற்ற மோட்டாரில் காலையிலும் மாலையிலும் சர்க்கார் அலுவலகத்திற்குச் சென்று 'ஆஜர்' படுத்திக்கொண்டு வந்தார். பாவம்! கடைசிக் காலத்தில் 'பொல்லாதவர்' என்ற பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். திட்டமிட்டுச் செயலாற்றுகின்ற ஒருவர், முயற்சியில் தோல்வி கண்டுவிட்டால் ஏமாளிபோல் நடித்துத் தம்மை வெள்ளை உள்ளம் படைத்தவர் என்று வெளிக்காட்டிக்கொள்வது அரசியலில் மிகச் சாதாரணம். யாரைக் கவிழ்க்க நினைக்கிறார்களோ அவர்களிடமே களங்கமில்லாதவர்போல நடித்தாகவேண்டும். இதுதான் அரசியலில் பிரதான கலை. அந்தக் கலையில் வெற்றிபெற்றவர்களால் தான் அரசியலில் தொடர்ந்து இருக்கமுடியும்.

எதிர்காலத்தில், யாரை ஆதரித்தால் சாதகம் என்ற கணக்குப்போட்டுப்பார்த்துக் காரியத்தில் இறங்கிய ராமனுதபுரம் சேதுபதி இடறிவிழுந்துவிட்டார். தட்சிணப் பிரதேசம் ஏற்பட்டுவிடும்; அவ்வாறு ஏற்பட்டால் அந்தப் பரந்த பகுதிக்கு ஆச்சாரியார்தான் பிரதமராக வரமுடியும் என்றோ, அல்லது, காமராஜர் நிச்சயமாக இது விஷயத்தில் ஆச்சாரியார் சொல்லுவதை ஏற்பார் என்ற நம்பிக்கையிலோ, எதை எதையோ பேசி, சேதுபதி தன்னைத் 'தேய்ந்த பண'மாக்கிக் கொண்டார்.

"தட்சிணப் பிரதேசத்தை ஆதரிக்காதவர்கள் துரோகிகள்" என்று மூலை முடுக்கெல்லாம் முரசறைந்து கொண்டுவந்த சேதுபதி, காமராஜர் தட்சிணப் பிரதேசத்தைப் பற்றிய தன் கருத்தைத் தெரிவித்தபின் என்ன சொல்லியிருக்கிறார்? 'எந்தப் பிரதேசம்' எப்படி உருவானால் எனக்கென்ன? எனக்கு வேண்டியது என் பதவிக்கு ஒரு பென்ஷனின் மாத்திரை - என்ற வகையில் கோழைத்தனத்துடன் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அன்று பேசிய அந்த வீரமெங்கே? அந்த நெஞ்சுறுதியெங்கே? அந்த வீர உரைக்கு இந்தச் சமாதான அறிக்கை பொருந்துமா? அல்லது சேதுபதி,

திட்டத்தில் தவறி புது மகுடி வாசிக்கிறாரா? புரியவில்லை! சேதுபதியின் அறிக்கையைப் படித்துப் பாருங்கள்:-

'திருவாங்கூர்-கொச்சி மாகாணத்தில் தற்பொழுது சனநாயக முறையில் அமைக்கப்பட்ட அரசாங்கம் இல்லாதபோது, தட்சிணப்பிரதேசம் அமைப்பதற்கு இது தருணம் அல்ல வெகுறும் பொதுத் தேர்தல்கள் நடைபெற்ற பின்பே இச்சிக்கல்களை ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டால் தீர்வு காணமுடியும்.

"தட்சிணப் பிரதேச அமைப்புப் பற்றிய சிக்கல் குறித்தும் கேரள மக்களின் கருத்தையும் நாம் ஆலோசனை செய்யவேண்டும். பொதுத் தேர்தல்கள் முடிவடைந்த பின்தான் இச்சிக்கல்களை எடுத்துக்கொள்ளவேண்டும்.

"அமிர்தசரசு காங்கிரஸ் கூடுவதற்குமுன் நடைபெற்ற சென்னை அமைச்சரவையின் சாதாரணக் கூட்டத்தில் முதல் அமைச்சர், திரு. காமராசரும் தட்சிணப் பிரதேச அமைப்புக்கு ஆதரவாக இருந்தார் என எனக்குத் தெரியவந்தது. ஆனால் இப்பொழுது காமராசர் கூறுகிறபடி தம் கருத்து தவறாகும்"



இந்த அறிக்கையைப் படித்த பிறகு ஒரு விஷயம் வெளிப்பட்டிருக்கிறது. காமராஜர் ஊமையாக இருந்ததின் காரணமாகச் சேதுபதி சிக்கிக்கொண்டார்.

அரசியலில் உருட்டுவிழிக்காரர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்; ஆனால், தனக்கென்றே 'கொள்கையில்லாத உருட்டுவிழிக்'காரர்கள் கடைசிவரை கேலிச்சித்திரமாகவே இருந்துவிட்டுத்தான் கண்ணைமூடியிருக்கிறார்கள். பரிதாபத்திற்குரிய சேதுபதிச் சீமான் ஏமாந்து போனார். ஏதோ ஒரு குதிரைக்குப் பணம் கட்டுவோம்; வெற்றிபெற்றால் லாபம், தோற்றால் பரவாயில்லை என்று கருதிடும் தனது பொழுது போக்கு விளையாட்டை அரசியலிலும் விளையாடிப் பார்த்திருக்கிறார். 'மக்களுக்கு எஜமானர்களாக இருந்தோம்; இப்போது மக்கள் நாம் தங்களுக்கு எஜமானர்கள்' என்பதை மறந்துவிட்டதன் விளைவே இந்த விபரீதங்கள்!

"அமைச்சர் காமராஜர் தட்சிணப் பிரதேசத்தை ஆதரிப்பதாகத் தெரியவந்தது. அதனால் தான் நானும் ஆதரித்தேன்" என்கிறார். மந்திரிகள் பேச வேண்டிய பேச்சல்லவே இது! தனக்குத்தான் ஒரு கொள்கை இல்லை என்றாலும், தனக்கு முன்னோடியாக இருக்கிறவரையாவது புரிந்துகொள்ளுகிற ஆற்றல் வேண்டாமா? அதிலும் 'பூஜ்யம்'தான் என்றால் யாரை நொந்து என்ன பயன்? 'காங்கிரசைக் கலையுங்கள்' என்ற காந்தியாரின் பொன்மொழிதான் நமக்கு நினைவுக்கு வருகிறது!

இங்கே நாம் சேதுபதியைக் குற்றம் சாட்டுவதெல்லாம் 'ஆதரிப்பவர் எதிர்க்கிறார்' என்பதற்காகவோ, ஆச்சாரிய மோகன், காமராஜர் பிரியராகி விட்டார் என்பதற்காகவோ அல்ல! **யார் எதுபற்றிப் பேசி, என்னென்ன குழப்பங்களை உண்டுபண்ணினாலும் நாம் நினைப்பதையே மக்கள் நினைக்கிறார்கள் என்ற தைரியத்தில் இருப்பவர்கள் நாம்!**

சேதுபதி ஆதரித்தார் என்பதற்காக மக்கள் ஆதரித்துவிடப் போவதில்லை. அவர் எதிர்த்துவிட்டார் என்பதற்காக ஜன சமுதாயம் அவரைப் பின்பற்றிவிடப் போவதில்லை. உணர்ச்சிக்கு வசப்பட்டு உபாதைக்குள்ளாகக் கடந்த நூற்றாண்டு மக்களல்லவே இன்றைய வாக்காளர்கள்! சேதுபதியின் பால் நமக்கேன் அவ்வளவு அக்கறை! மக்களுக்குத் திசை காட்டிச் செல்லும் அமைச்சர்கள் இரட்டைப் படகில் கால்வைக்கக்கூடாது என்பதே நமது பெரு நோக்கு!

சேதுபதி தட்சிணப் பிரதேசத்தை ஆதரித்தார் எதிர்த்தார் என்பது மட்டுமல்ல மக்கள் அவரை அலட்சியப்படுத்துவது! **"தட்சிணப் பிரதேசம் அமைக்கும் ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொள்வதானல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மேலும் 100 கோடி ரூபாய் ஒதுக்க இந்திய சர்க்கார் தயாராக இருக்கிறது என்பதாகச் சென்னை மந்திரி சேதுபதி கூறியதாக அறிகிறேன் அதற்கு ஆதாரமில்லை"** என்று அண்மையிலே சென்னை வந்திருக்கும் தேஷ்முக் கூறியிருக்கிறார். தட்சிணப் பிரதேச ஆதரவுபெற சேதுபதி பெரும் பொய் ஒன்றைக் கூறியிருப்பதாகவும் தெரியவருகிறது. சலனபுத்தி கொண்டோர், அரசியலில் எரிநட்சத்திரமாகிவிடுவார்கள் என்பதைச் சேதுபதியார் மறந்துவிடக்கூடாது. படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போதே, 'பாரிசிலேயிருந்து வந்த பஞ்சகல்யாணிக்குதிரை' சௌக்யமா என்று கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டவருக்கும் சொல்கிறோம். 'சேதுபதியாரே, நீங்கள் பொறுப் பேற்றிருப்பது அரசியலில் என்பதை மறந்துவிடாதீர்கள்! மக்கள் சம்பந்தப்பட்டது. எதிர்காலத் தென்னாட்டின் 'தலை விதி'யை நிர்ணயிக்கக்கூடியது! கிண்டி விளையாட்டு வேண்டாம் சீமானே! நெஞ்சில் பட்டதைப் பட்டவர்த்தனமாகச் சொல்லிவிடுங்கள்! சர்க்கார்-மாளிகை வாசத்தைச் சிரஞ்சீவியாக்கக் கூடுவிட்டுக் கூடு பாயாதீர்கள்!"

சேதுபதியார் இதை மனதில் கொள்ளட்டும்! அடுத்துவரும் சமுதாயம் விழிப்புள்ள சமுதாயம்! மக்கள் மனதைக் குழம்பச் செய்யாதீர்கள்! ★

ஏகவாசகன்...

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

குலோத்துங்கன் தின்றுவிடுவான் போல அவனைப் பார்த்தான். "அறிவு கெட்டவனே! அன்னம் வழங்கிய கையையே அறுத்தெடுத்த நாசகாரனே! இனி ஒரு விநாடிகூட நீ இந்த அரண்மனையில் இருக்கக்கூடாது! போ வெளியே!" என்று சீறினான் குலோத்துங்கன். அதற்குமேல் பேச அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. பதில் சொல்ல ஏகவாசகனுக்கு நா எழவில்லை. "பத்தாண்டுக்காலம் அண்ணன்போல் பழகியும் கெட்ட பெயரோடு வெளியேற வேண்டியிருக்கிறதே" என்று எண்ணியபோது, அவன் இருதயம் வெடித்துவிடும் போலிருந்தது. தோகையின் வாழ்விலே அவன் செலுத்திய அக்கறையே அந்த வாழ்வைப் பாழ்படுத்திவிடுமோ என்று அவன் அஞ்சினான். எதைச் சொல்வது? எப்படிச் சொல்வது? சொன்னால் கேட்பானா குலோத்துங்கன்? சூழ்நிலை அப்படி இல்லையே!

அவன் தலை குனிந்தது. கால்கள் நடந்தன. இதயம் பத்தாண்டு வாழ்வையும் படலம் படலமாக நடக்கவிட்டது.

கொங்குநாட்டைச் சேர்ந்த நங்கவள்ளிதான் ஏகவாசகன் பிறந்த ஊர். வாணர் மரபிலே தோன்றிய அவன், தஞ்சைக்கு வந்து போர்ப் பயிற்சி பெற்று, குலோத்துங்கனின் யானைப் படையிலே ஒரு வீரனாகச் சேர்ந்தான். கி. பி. 1194 ல் கடப்பையை ஒட்டிய **மகாராஜ பாடி நாட்டை**, வல்லூரபுரத்திலிருந்து ஆண்டுகொண்டிருந்த **புசபல வீர நல்ல சித்தன தேவ சோழ மகாராசன்** என்னும் தெலுங்குச் சோடன், குலோத்துங்கனுக்குப் பணியாது காஞ்சியைக் கைப்பற்றிய பெருமையில் தஞ்சையையும் மோதியபோது குலோத்துங்கனது யானைப் படைகளைத் திறம்பட நடத்தினான் ஏகவாசகன். களத்துக்கே வந்திருந்து அந்தக் கண்ணுரைக் கண்ட குலோத்துங்கன் அந்த இளைஞனைத் தன் அருகிலேயே வைத்துக்கொண்டான். பெற்றோரை இழந்த ஏகவாசகனும் குலோத்துங்கனையும் புவன்முழுதுடையாளையும் தன் பெற்றோராகவே கருதி, அன்பு செலுத்திவந்தான். பின், வடபுலப் போரிலும், வேங்கி மண்டலப் போரிலும், விக்கிரம பாண்டியனோடு பொருதிய போரிலும், ஏகவாசகன் தன் திறமை முழுவதையும் காட்டி, அதன்மூலம் குலோத்துங்கனின் சுவீகாரப் புதல்வனுகவே ஆகிவிட்டான். சுந்தரத் தோகைக்கு அவனிடம் அளவுகடந்த அன்பு. வேங்கி மண்டலப் போரில் அவன் காயம் பட்டு வந்தபோது, அவள் வடித்த கண்ணீர் பொன்னி நதியாகப் பெருகியது எனலாம். இரண்டு பேர் உள்ளத்திலும் கள்ளங்கபடற்ற சகோதர பாசமே மேலோங்கியிருந்தது. அடிக்கடி தஞ்சைக்கு வரப்போக இருந்த மணவாளப் பெருமாள் ஏகவாசகனிடம் கொண்டிருந்த அருமை, பக்குவமான சூழ்நிலையில் வெற்றிகரமாகச் செயல்பட்டு விட்டது......

ஏகவாசகன் கால்கள் தஞ்சை நகரைக் கடந்துகொண்டிருந்தன. அவன் இதயத்திலே குருதி கசிவதைக் கண்களில் கசிந்த கண்ணீர் காட்டிற்று. தாய்வீட்டை விட்டுப் பிரிய நேர்ந்த தனயனின் மனம் போல் அவன் மனம் படாத பாடு பட்டது. போகுமிடம் அறியாமல் போய்க்கொண்டிருந்தான்.

இங்கே அரண்மனையில், கலங்கிய உள்ளத்தோடு துடித்துக்கொண்டிருந்தாள் தோகை. ஏகவாசகன் வெளியேறியது அவளுக்குத் தெரியாது. "முதல் நாளிலேயே சுவைக் குறைவான ஒரு நிகழ்ச்சியைக் கண்டிருக்கிறாரே மணவாளர்! இனித் தன் வாழ்வு என்ன ஆகுமோ? எப்படி இருக்குமோ!" என்று எண்ணி எண்ணி நெட்டுயிர்த்தாள். அந்த நேரத்தில் தோழிகள் எல்லோரும் ஓடிவந்தார்கள். தோகையை அலங்கரிக்க ஆரம்பித்தார்கள். "இன்று உனக்கு முதல் இரவு" என்றார்கள். "இன்பத்திற்கா, துன்பத்திற்கா" என்று கேட்பவளைப்போல அவர்களைப் பார்த்தாள் தோகை. அலங்காரம் முடிந்தது. தனியறையிலே விடப்பட்டார்கள் மணவாளனும் தோகையும்.

தலைகுனிந்து நின்ற தோகையை அதிகாரத்தோடு அழைத்தான் மணவாளன். கனிவில்லாத அந்தக் குரலின் கடுமையை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது. மெதுவாக அவன் அருகில் சென்றாள். கண் கலங்கி நின்றாள். 'ஏன் அழுகிறாய்?' என்று கேட்கவில்லை அவன். அவள் அழுகைக்குக் காரணம் ஏகவாசகன் போனதாகத்தான் இருக்கும் என்று ஒரே முடிவு கட்டிக்கொண்டு, "ஏன்! ஏகவாசகன் போய்விட்டானே என்று அழுகிறாயா? காதலன் பிரிவுதான் கலக்கத்திற்குக் காரணமா?" என்று கிண்டலாகக் கேட்டான் மணவாளன். இப்போது அந்தக் கிண்டல் அவளை ஒன்றும் செய்யவில்லை. காரணம், ஏகவாசகன் போய்விட்டான் என்ற செய்தி பேரிடியாக அவள் தலையில் விழுந்தது. தன்னையும் மறந்து, "போய்விட்டாரா?" என்று கேட்டாள் தோகை! "அடாடா எவ்வளவு கலக்கம்? காதலன் பிரிவிலே எவ்வளவு வருத்தம்?" என்று கூறிக்கொண்டே எழுந்து, படாரென்று அவள் கையைப் பிடித்து இழுத்து, உட்கார வைத்தான். தோகை வருந்தவில்லை. அவள் நெஞ்சம் ஏகவாசகனிடமிருந்தது. அதை நினைக்க நினைக்கத்தான் மணவாளனுக்கு ஆத்திரம் அதிகம் வந்தது. அவளிடம் ஏகவாசகனைப் பற்றிக் கேவலமாகப் பேச ஆரம்பித்தான். அவனையும் கேலி செய்தான். அவள் மௌனமாகவே இருந்தாள். தன் மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டாள். வெகு சிரமப்பட்டுத் தன் மனதை முதல் இரவுக்குத் திருப்பிக்கொண்டாள். அவன் முகத்தைப் பரிவோடு பார்த்தாள். அவனும் அந்த நேரத்தில் கோபத்தைத் தொடர்கதையாக்க விரும்பவில்லை. அவளைத் தன் மார்பிலே சாய்த்துக்கொண்டான். மெல்லிய அவளது அதரங்களிலே முத்தங்களைப் பொழிந்தான். அவளும் அன்புகொண்டு சுவைத்தாள்.

பொழுது விடிந்தது. தோகை முதல் முதலில் எழுந்து வெளியிலே வந்தாள். ஏகவாசகனைப் பற்றி விசாரித்தாள். அவன் போனதோ குலோத்துங்கனையும் மணவாளனையும் தவிர வேறு யாருக்கும் தெரியாது. அவர்கள் இருவரிடமும் விசாரிக்க அவளால் முடியாது. குலோத்துங்கனிடம் விசாரித்தால் தப்புக் கணக்கு அதிகமாகிவிடுமோ என்ற பயம் வேறு! அவள் நெஞ்சம் அமைதி இழந்து தவித்தது. அந்த நிலையிலேயே அன்று மாலை மணவாளனோடு திருமுனைப்பாடி நாட்டுக்குப் புறப்பட்டாள் சுந்தரத் தோகை.

இரவென்றும் பகலென்றும் காலம் நடந்தது. மணவாளன் சுந்தரத் தோகை இருவரது வாழ்வும் தங்கு தடையின்றி ஓடிக்கொண்டிருந்தது. இந்நாளில் தோகை ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தாள். அவள் இதயத்திலிருந்து அன்புச் சகோதரன் ஏகவாசகன் சிறிது சிறிதாக மறைந்துவிட்டான். இந்த இடைக்காலத்தில் மணவாளப் பெருமாளின் இயற்கையான நச்சு நினைப்பு வேறு வகையிலே பாய்ந்து ஓடியது. திருமுனைப்பாடி நாட்டுக்குத் தான் காவல் அதிகாரிதான் என்பதை மறந்தான். மன்னவன்போலவே நடக்க ஆரம்பித்தான். வசூலிக்கப்படும் திறைகளைத் தஞ்சைக்கு அனுப்புவதை நிறுத்தினான். கல்வெட்டுக்களிலெல்லாம் மணவாள மன்னவன் என்று குறிக்கும்படி உத்தரவிட்டான். இதை அறிந்தும் குலோத்துங்கன் வாளாவிருந்தான். 'மணவாளன் மன்னனானாலும் தன் மகள்தானே ராணி' என்ற எண்ணந்தான் குலோத்துங்கனை அமைதி கொள்ளச் செய்தது. ஆனால் திருமுனைப்பாடியோடு திருப்தியடையவில்லை மணவாளன். தஞ்சையின்மீதும் கண் வைத்தான். தன்னைப் போன்று குலோத்துங்கனுக்குத் துணைபுரிந்த படைத்தலைவர்களான இளியூர் மலையமான், ஆடையூர் நாடாள்வான், அதிகமான் இராசராசதேவன், விடுகாதழகிய பெருமாள், சீயகங்கன், சம்புவராயன், பொன் பரப்பினன், முதலியோரைத் தன் பக்கத்தில் சேர்க்கப் பார்த்தான். ஆனால் நன்றிமிக்க இந்த வீரர்கள் யாரும் அவன் பக்கத்தில் நெருங்கவில்லை. கடைசியில் மகத நாட்டுக் குறுநிலமன்னன் **வாணவரையனை**த் தன் கைக்குள் போட்டுக் கொண்டான். தஞ்சையிலிருந்தே சில துரோகிகளைப் பிடித்து அவர்களுக்குக் கையூட்டு (லஞ்சம்) கொடுத்துச் சோழநாட்டின் உட்பகுதியில் கலகம் செய்யத் தூண்டினான். அவன் நினைத்தபடியே கலகம் சற்றுப் பெரிய அளவில் நடந்தது. குலோத்துங்கன் திகைத்தான். கலகத்திற்குக் காரணம் யார் என்று கண்டுபிடிக்க முடியாமல் திணறினான். மதுரை மன்னன் **சடையவர்ம குலசேகர பாண்டியன்தான்** கலகத்தைத் தூண்டிவிடுகிறான் என்று அவனது ஒற்றர்கள் செய்தி கொண்டுவந்தார்கள். அந்தச் செய்தியும் மணவாளனது சூழ்ச்சியின் விளைவே. அதையறியாத குலோத்துங்கன் சடையவர்மனை எதிர்த்துப் போர்முரசு கொட்டினான். கலகத்தை அடக்குவதில் நிலைகுலைந்திருந்த படைகளைப் போருக்குத் தயாராக்குவதற்குப் பெரும்பாடு பட்டான். படைகள் போருக்குப் போய்விட்டால் தஞ்சை தனக்கே எனக் கணக்குப்போட்டான் மணவாளப் பெருமாள். முகவைப் பகுதியில் திருப்புத்தூருக்கு அருகே உள்ள மட்டியூரில் (சதுர்வேதி மங்கலம்) சடையவர்மன் படைகளும் குலோத்துங்கன் படைகளும் மோதின. இந்தச் செய்தி திருமுனைப்பாடிக்கு எட்டிற்று. மணவாளப் பெருமாள் உற்சாகத்தில் மிதந்தான். மாறுவேடத்தில் தஞ்சைக்குப் புறப்படத் தயாரானான்.

அரசியற் குழப்பங்களில் அக்கறையில்லாத சுந்தரத்தோகை, மணவாளப் பெருமாளின் மாறுபாடான நடவடிக்கைகளில் ஐயமுற்றாள்.

"என்ன இன்றைக்கு ஒரே உற்சாகம்?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை. தஞ்சையில் ஒருவரைப் பார்க்கவேண்டும். போய்வந்து விடுகிறேன்." என்று கூறிவிட்டு அடுத்த கேள்விக்கு இடம் வைக்காமல் பறந்தான் மணவாளன்.

அங்கே - மட்டியூரில் கடும்போர் நடந்துகொண்டிருந்தது. வெற்றி பாண்டியனுக்கா, சோழனுக்கா என்று நிர்ணயிக்க முடியாமலிருந்தது. குலோத்துங்கன் தானே தலைமை தாங்கிப் படை நடத்தினான். இறுதியில் சடையவர்மன் படைகள் சிதறி ஓடின. சடையவர்மன் தன் தம்பியோடு மதுரையை விட்டே ஓடிவிட்டான்.

—5-ம் பக்கம் —

வருந்துகிறோம்

சமூக சீர்திருத்தத்திற்கு அரும் பாடு பட்ட காரைக்குடி சொ. முருகப்பா அவர்கள் காலமானார் என்ற சேதி கேட்டு மிக வருந்துகிறோம். சொ. முருகப்பா அவர்கள் சென்னையில் மருத்துவ சிகிச்சை பெற வந்திருந்தபோது ஜூன் 20-ந் தேதி இரவு 11 மணிக்கு இயற்கை எய்தினர். முருகப்பாவுக்கு வயது 63. பொதுப்பணியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த அவர் 'குமரன்' பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து பணியாற்றியிருக்கிறார். அமராவதிபுதூரில் மகளிர் இல்லம் நிறுவி மாண்டிசோரி முறைக் கல்விப் பயிற்சி அளித்து வந்தார். சொ. முருகப்பா அவர்களின் மறைவு தமிழ் நாட்டுக்கும், குறிப்பாகத் தென் மாவட்டங்களுக்குப் பேரிழப்பாகும்.

முருகப்பா அவர்களின் குடும்பத்தாருக்கும், அவரது உறவினர்களுக்கும் நமது ஆழ்ந்தஅனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். (ஆ-ர்)

அஞ்சல் மூலம் கல்விப் பயிற்சி

THE BEST POSTAL TUTORIAL COLLEGE TIRUCHI

1. 1956, அக்டோபர் S. S. L. C.

2. 1956, செப்டம்பர் இண்டர்மீடியட் (சென்னை)

தேர்வு எழுதும் மாணவர்கட்குத் தபால் மூலம் சிறந்த முறையில் பாடங்கள் அனுப்பிப் பயிற்சி தரப்படும்.

குறைந்த கட்டணம்! வகுப்புகள் தொடங்கிவிட்டன! வெற்றிக்கு உறுதி!! இன்றே சேருங்கள்!!

உடனே 2 ஒரு அணு ஸ்டாம்புகளுடன் விண்ணப்பியுங்கள்.

ஏ. ராதாகிருஷ்ணன், நிருவாகி,
அஞ்சல் முறைக் கல்விப் பயிற்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 2.

கொள்கைக் குழப்பத்தின் தாய்!

மாஸ்கோவிலே மழை அடித்ததாம்; ஜீவாவுக்குச் சளி பிடித்ததாம்!

உருப்படாத அனைத்திந்திய அமைப்பில் ஒன்பதினாயிரம் குழப்பங்கள்!

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

"அவர்கள் தோன்றிய நாளிலிருந்து இன்றுவரை எந்த ஒரு சிறிய பிரச்சினையிலேனும், முன் சொன்னதிலிருந்து விலகாமல் நிலை நின்றார்கள் — அன்றுமுதல் இன்றுவரை, கூறிய கொள்கையை ஒலித்துக் கொண்டிருக்கிறார்கள் — என்று காட்ட முடியுமா என்றால், நிச்சயம் முடியாது!

"அது, அகில உலகப் பிரச்சினையானாலும் சரி — அகில இந்தியாவிற்குமான பிரச்சினையானாலும் சரி — தமிழ் நாட்டைப் பற்றிய பிரச்சினையானாலும் சரி — திருப்பூரில் உள்ள ஆலைத் தொழிலாளர் பிரச்சினையானாலும் சரி — அன்று முதல் இன்று வரை ஒரு அடிப்படை இலட்சியத்தைத் தங்கள் கோஷத்தின் ஆக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறார்களா என்றால், இல்லை!

"அன்னிய நாட்டுக் கொள்கையை எடுத்துக் கொண்டால், இந்தக் கம்யூனிஸ்டுகள் எங்கெங்கோ ஏறி எங்கெங்கோ விழுந்து, படுகாயப்பட்டு எதை எதையோ இழந்து தவித்திருக்கிறார்கள் என்பது குறித்து இந்திய அரசியலின் குறுகிய கால வரலாறு, ஏராளமாகத் தன்னகத்தே அடைத்து வைத்துக் கொண்டிருக்கிறது."

"1933-ல், இன்றுள்ள ஐ. நா. நிறுவனம்போல, அன்று இருந்த 'லீக் ஆப் நேஷன்ஸ்' என்ற சர்வதேச சங்கத்தில் ரஷ்யாவிற்கும் ஒரு இடம் அளிக்கப்பட்ட நாளிலிருந்து, அங்கே, ரஷ்யாதான் வெறியோடு பாசிசத்தைத் தாக்கிக்கொண்டிருந்தது. ரஷ்யாதான், 'பாசிஸ்டுகளை வளரவிடக் கூடாது; பாசிஸ்டுகள் — அதாவது இத்தாலி நாட்டு முசோலினி, ஜெர்மனியில் இட்லர், ஸ்பெயினில் முளைத்துக் கொண்டிருந்த பிராங்கோ — இவர்களை எல்லாம் ஒழித்துக் கட்ட வேண்டும்; பாசிசம் என்ற கொள்கை உலகில் வளரவிடக் கூடாது; பாசிசம் வளர்ந்தால், உலக மக்களின் நல்வாழ்விற்கு உலை வைக்கவே அது முற்படும்.' என்று ரஷ்யா பேசி வந்தது. 'பாசிசக் கொள்கைகளுக்குத் துணைபுரிகிறீர்கள்' என்று இங்கிலாந்தைக் கூட ரஷ்யா குற்றம்சாட்டி, பாசிசத்திற்கு எதிராக உரத்த குரலில் பேசி வந்தது.

"ரஷ்யா இப்படிப் பேச ஆரம்பித்தவுடன், உலகெங்கணுமுள்ள கம்யூனிஸ்டுகள், 'பாசிசத்தை ஒழிப்போம்; பாசிசம் வளருவது பேராபத்தாகும்; பாசிஸ்டுகளை முறியடித்தே தீர வேண்டும்' என்று, பட்டி தொட்டிகளில் எல்லாம் கூட முழங்க ஆரம்பித்தார்கள். இந்தியாவிலும் கம்யூனிஸ்டுகள் அப்படித்தான் அப்போது பேசினார்கள்.

"1939-ல் உலகப் போர் துவங்கிற்று. அந்த நாள்வரை, 'பாசிஸ்டுகளை ஒழிக்க எவரோடு வேண்டுமானாலும் சேர்ந்து போராடுவோம்,' என்று பேசி வந்தனர், கம்யூனிஸ்டுகள்!

"திடீரென பத்திரிகையில் ஒரு நாள் செய்தி வந்தது; 'பாசிஸ்டுகள் முகாமிலேயே மிகவும் வெறிபிடித்த தலைவனாக விளங்கிய இட்லருடன் ரஷ்யா ஒரு அனாக்கிரமிப்பு ஒப்பந்தம்-ஒருவரை ஒருவர் ஆக்கிரமிப்பு செய்வதில்லை என்ற நட்பு உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டது'-என்பதுதான் அந்தச் செய்தி!

"ரஷ்யாவிற்கும் - ஜெர்மனிக்கும் நட்பு உடன்படிக்கை ஏற்பட்டது என்று கேட்டதும், இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்டுகள் திகைத்துப் போனார்கள்!

"பலர் தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் - 'போலீஸ் அடக்குமுறை வரும்போதுதான், கம்யூனிஸ்டுகள் தலைமறைவாகப் போய் விடுவர்'-என்று! ஆனால், எனக்கு நன்றாகத் தெரியும் - அவர்களுக்கு, தங்களின் கொள்கைக்குழப்பச் சூடு தாங்க முடியாத போதும் 'அண்டர் கிரவுண்டி'ல் நுழைந்துவிடுவார்கள் என்று; மறுபடியும், கோமின்பாரமோ அல்லது அதன் 'இந்தியத் தபால் பெட்டி'யாக விளங்கிக் கொண்டிருக்கும் ஹாரிபாலிட்டோ வந்து கைகொடுத்துத் தூக்கும் போதுதான் வெளிவருவார்கள், இந்தியக் கம்யூனிஸ்டுகள் - புழுதியைத் துடைத்துக்கொண்டே அழுவார்கள்.

"பாசிஸ்டுகள் ஒழியவேண்டும் என்று சொன்னோம்; என்றாலும், இப்போது நடைபெறுகிற யுத்தம் ஏகாதிபத்தியங்களுக்கிடையில் நடைபெறும் யுத்தம்; பாசிசத்தை ஒழிக்கும் யுத்தம் அல்ல; என்று, ஜெர்மனிமீது மக்களுக்கு அனுதாபம் ஏற்படத்தக்க வகையில் - அதனை ஆதரிக்கும் போக்கில் - தங்கள் கொள்கைக்குத் துரோகமிழைக்கும் வகையில் பேசத் தலைப்பட்டார்கள்; இரண்டாண்டுகள் கூட ஆகவில்லை இந்த மாற்றத்திற்கிடையில்!

"நடைபெற்ற உலக யுத்தத்தை ஏகாதிபத்திய யுத்தம் என்று கம்யூனிஸ்டுகள் கூறியபோது, அவர்களுக்கு இந்தியாவில் ஒரு பாதுகாப்புக் கிடைத்தது.

"காங்கிரஸ், அப்போது அந்த யுத்தத்தை 'ஏகாதிபத்திய யுத்தம்' என்று சொல்லிக்கொண்டிருந்தது. அந்தப் 'பெரிய பஜனை கோஷ்டி'யோடு, இந்தச் சின்ன 'பஜனை கோஷ்டி'யும் சேர்ந்துகொண்டு 'ஏகாதிபத்திய யுத்தம், ஏகாதிபத்திய யுத்தம்,' என்று பாடி வந்ததால், வேறுபாடு தெரியவில்லை!

ஆனால்......! மறுபடியும் ரஷ்யா என்ன காரணத்தாலோ — நிச்சயமான காரணமான ரஷ்ய மக்களின் நல்வாழ்வு கருதி—ஜெர்மனியுடன் யுத்தம் தொடுத்தது; உடனே, இந்த 'பெரிய பஜனை கோஷ்டி'யிலிருந்து பிரிந்து, இந்த 'சின்ன பஜனை கோஷ்டி,' குறுக்கே சந்து ஒன்றில் புகுந்து 'இது மக்கள் யுத்தம்; மக்கள் யுத்தம்' என்று பாட ஆரம்பித்தது!

"ஏகாதிபத்திய யுத்தம், என்ற பல்லவி கூட முடிந்திருக்காது; அதற்குள்ளாக, 'மக்கள் யுத்தம்' என்று பாட ஆரம்பித்துவிட்டார்கள்!

"இப்படி, ரஷ்யா சொல்லுவதையே, திருப்பித் திருப்பிச் சொன்னதையே சொல்லும் கிளிப்பிள்ளைபோல—எது சொன்னாலும் 'ஆமாம்' போடும் 'ஆமாம் சாமி'கள்போல - எசமானன் கூறுவதையே திரும்ப ஒலிக்கும் எடுபிடியைப்போல நடந்துகொள்ளுவதையே தங்களின் நடைமுறையாக வைத்திருக்கின்றனர் கம்யூனிஸ்டுகள்!

"ரஷ்யத் தலைவர்களான குருஷ்சேவ், புல்கானின் ஆகியோர் இந்தியா வருமுன்னர், 'நேரு சர்க்கார் ஒழிக', 'மக்கள் விரோத சர்க்கார் ஒழிக'. 'ஜனநாயக விரோத சர்க்கார் ஒழிக', 'சர்வாதிகார சர்க்கார் ஒழிக'. 'இந்த நேரு சர்க்கார் ஒழிந்தால்தான், மக்களுக்கு சுபிட்சமான வாழ்வு கிடைக்கும்', என்று பேசிவந்தனர், கம்யூனிஸ்டுகள்!

"'காங்கிரசிற்கு உண்மையான எதிரிகள் - கலங்காத, கரையாத எதிரிகள் நாங்கள்தான்; மற்றவர்கள் எல்லாம் காங்கிரசில் கரைந்துவிடக் கூடியவர்கள்' என்றும் பேசினர்; ஆனால், இன்று நிலை என்ன?

"நேரு ரஷ்யா சென்றார்; அவருக்கு அங்கே தரப்பட்ட வரவேற்புச் செய்திகளையும், படங்களையும் இந்த நாட்டுப் பத்திரிகைகளில் கண்டனர் கம்யூனிஸ்டுகள்; 'தங்கள் தந்தையர் நாடான ரஷ்யாவில், மக்கள் விரோதமான சர்க்காரின் தலைவருக்கு எப்படி இவ்வளவு பெரிய வரவேற்புக் கிடைக்கிறது?' என்று திகைத்தார்கள்; குழம்பினார்கள்!

"மேலிடத்திலிருந்து இவர்களுக்குத் தாக்கீது வந்திருக்கிறது-'இது குறித்து நீங்கள் சிந்திக்கவும் கூடாது; கண்ணை மூடிக்கொண்டு பத்து எண்ணிக்கொண்டிருங்கள்; ஒரு மாறுதல் விளையும்'-என்று! இந்தியக்— கம்யூனிஸ்டுகளின் சிந்தனை ஸ்தம்பித்து நின்றது!

"பின்னர் சில மாதங்களுக்கெல்லாம், புல்கானினையும், குருஷ்சேவையும் ஏற்றிக்கொண்டு விமானம் ஒன்று டில்லியில் வந்து இறங்கியது; நேரு பண்டிதர் அமோகமாக அவர்களை வரவேற்றார்; கம்யூனிஸ்டுகளின் சுரம் குறைந்தது!

"பின்னர் கூடி, தீர்மானம் ஒன்று போட்டார்கள். என்ன அந்தத் தீர்மானம்?

"உலக சமாதானத்திற்காகப் பாடுபடும் உத்தமர்கள் வரிசையில் இந்தியப் பிரதமர் பண்டித நேருவும் முக்கியமான ஒருவர் என்பதை நாங்கள் தாமதித்தாலும், நிச்சயமாக இப்போது தெளிவாக உணர்ந்துகொண்டோம்,' என்று, அந்தத் தீர்மானம் கூறிற்று.

"அந்தத் தீர்மானத்தின் கீழே பண்டைக் காலத்தில் தாங்கள் உயிரோடு இருந்தார்கள் என்பதை நினைவுபடுத்திக் கொள்வதற்காக, 'நேரு உலக சமாதானத்திற்காகப் பாடுபடுகிறார் என்பதை நாங்கள் ஒத்துக்கொண்டாலும், உள்நாட்டில் அவர், மக்களுக்கு விரோதமான—ஜனநாயக விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார் என்பதையும் நாங்கள் கண்டிக்காமலிருப்பதற்கில்லை' என்றும் எழுதிக் காட்டினார்கள்!

"எவ்வளவு பெரிய முரண்பாடு? சொந்த நாட்டில் ஜனங்களுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறான் ஒருவன்; சொந்த மக்களின் உரிமைகளைப் பறிக்கிறான்: அவர்களுக்கு உரிமை தர மறுக்கிறான்; 'ஜனநாயகம் என்று நான் சொல்லுவேன்; ஆனால், நீங்கள் உங்கள் வாழ்வில் ஜனநாயகத்தைக் காண முடியாது' என்றுகூறும் ஜனநாயக உடை தரித்த சர்வாதிகாரியாக விளங்கிக் கொண்டிருக்கிறான்; அவன் எப்படி உலக சமாதானத்திற்காகப் பாடுபட முடியும்?- என்று கம்யூனிஸ்டு நண்பர்கள் கிஞ்சிற்றும் சிந்தித்ததாகக் காணவில்லை; எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை; எண்ணிப் பார்ப்பதற்கான உரிமை, அவர்களுக்கு அவர்கள் கட்சியில் தரப்படவில்லை.

"இன்று கம்யூனிஸ்டுகள் எந்த அளவுக்குச் சென்றிருக்கிறார்கள் தெரியுமா?

"அடுத்த ஆறு மாதத்திற்குள் பாலக்காட்டில் கூடி இன்னுமொரு தீர்மானம் போட்டார்கள்:—

'**முதல் கட்டம்**: பண்டித நேரு உலக சமாதானத்திற்கு விரோதி; உள்நாட்டில் ஜனங்களின் பகைவன்.

"**இரண்டாம் கட்டம்**: பண்டித நேரு உலக அமைதிக்குப் பாடுபடும் உத்தமர்; உள்நாட்டில் மட்டும் ஜனங்களுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றார்.

"**மூன்றாவது கட்டம்**: பண்டித நேரு உலக சமாதானத்திற்காகப் பாடுபடுபவர் மட்டுமல்ல; உள்நாட்டில், இந்திய மக்களின் சுபிட்சத்திற்காக, எத்தனையோ தொல்லைகளுக்கிடையேயும் சிரமப்பட்டு, இரண்டொரு ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரித்திருக்கிறார் என்பதால், அவரை நாங்கள் பாராட்டுகிறோம்-என்று தீர்மானம் போட்டார்கள்.

"இந்த மூன்றாவது கட்டத் தீர்மானம்தான், பாலக்காட்டில் நிறைவேறிய தீர்மானமாகும்.

"இந்த மூன்றாவது கட்டத்தைக் கூட வாரக் கணக்கில் தாண்டி நான்காவது கட்டத்திற்கு வந்துவிட்டனர், கம்யூனிஸ்டுகள்!

"என்ன அந்த நாலாவது கட்டம்? இன்று காலை செய்தி ஒன்று வெளிவந்திருக்கிறது.

"'காங்கிரஸ் சர்க்கார்களோடு ஒத்துழைப்பதற்கு, கம்யூனிஸ்டுக் கட்சி தன் ஆயத்தத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது,' - என்பதுதான் அந்தச் செய்தி!

— தொடரும் —

29. துணிந்தவருக் கில்லை துயர்.

வெண்பாப் போட்டி 29ன் பரிசு பெற்ற வெண்பாவையும் பிரசுரத்திற்குத் தகுதியுள்ள வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

★ கல்லெடுத்து வந்துநமைக் கையெடுத்துக் கும்பிட்டோர்
புல்லெடுத்துக் காசெடுத்துப் பொய்யெடுத்தார்-பொல்லார்
பணிந்தடங்கத் தாழ்வொடுங்கப் பாங்குதரும் தேர்தல்;
துணிந்தவருக் கில்லை துயர்.

—பொன்னிவளவன், பாவநாசம்.

★

தொல்லை எனக்களித்துச் செல்வம் பிரிந்துள்ளார்
கல்லோ அவருள்ளங் காரிகையே?-நல்ல
அணியெனக்குச் செத்திடலே அஞ்சாதே, யெண்ணித்
துணிந்தவருக் கில்லை துயர்.

—சி. சிவராமலிங்கம், சென்னை-1.

★

ஈருள்ளம் ஒன்றாய் இணைந்தபின் சாதிக்கும்
சீரிலாத் தாழ்சமூகச் செய்கைக்கும்-யாரும்
பணிந்தச்சம் கொள்ளல் பயனின்றே, பாரில்
துணிந்தவருக் கில்லை துயர்.

—மு. சீனிவாசன், திண்டுக்கல்.

★

காற்றும் புகுந்தறியாக் காதலுள்ளம் நம்முறவின்
சிற்றம் புகுந்தஃது சீர்குலைய-ஆற்றோம்
தணியகம் மூரகன்று தார்குழல்!வா செல்வோம்
துணிந்தவருக் கில்லை துயர்.

—முருகு குருசாமி, அயன்புரம்.

★

வேங்கைக்குத் தீங்கு வெகுவாகத் தானிழைத்தால்
தாங்காத வெஞ்சினத்தாற் தாவாதோ?-தாங்கிப்
பணிகின்ற ஏழைக்குப் பாரமிகப் போனல்
துணிந்தவருக் கில்லை துயர்.

—சிர. பழனிச்சாமி, புதுக்கோட்டை.

★

வானந்தான் பொய்த்திடினும் மாண்புமிகு எந்தமிழர்
தானந்தான் பொய்யாத் தவக்கொழுந்தர்-மானம்
அணிந்தின்று செங்கோல் அணைத்திடவே எண்ணித்
துணிந்தவருக் கில்லை துயர்.

—தமிழ்த்தேவன், வேலூர்.

★

தடிகொண்டு தாக்கிடினும் தீமைபல செய்து
வெடிகுண்டு வீசியெமை வீழ்த்திடினும்-வாடோம்!
தணியோம்!! ஆளவந்தோய்!!! தாயகத்தை மீட்கத்
துணிந்தவருக் கில்லை துயர்.

—இரா. கலியாணசுந்தரம், வலங்கைமான்.

★

மின்முன் இருளில்லை; மேதினியில் நற்குறளில்
முன்பின் முரணில்லை; மேவாதார்-தன்முன்
பணியாத் திருவிடத்துப் பாசறையைக் காக்கத்
துணிந்தவருக் கில்லை துயர்.

—கு. இரமாதேவி, சென்னை-1.

★

வாட்டி வதைக்கும் மடவடவர் ஆட்சிதனில்
நீட்டித்தல் நன்றாமோ நம்நாட்டை?-மீட்கும்
அணிவகுப்பிற் சேர்ந்திடுவோம்! ஆணவத்தை வெல்வோம்
துணிந்தவருக் கில்லை துயர்.

—நா. வேழவேந்தன், சென்னை-1.

முன்னம் பலர்மடிய மூவாண்டுத் தானிரம்பா
இன்மகனைச் செல்லவிட்டாள் போர்முனைக்கே-சென்றார்
அணிதேர்ப் படைவிலங்கி ஆவிநீத்தார் அந்தோ!
துணிந்தவருக் கில்லை துயர்.

—து. பெருமாள், சென்னை-11.

★

கனிந்ததற் கில்லை கசப்பு; சமரிற்
பணிந்தவர்க் கில்லை புகழ்ச்சி-கனியே
பிணைந்தவர்க் கில்லை பிரிவு; செயலில்
துணிந்தவருக் கில்லை துயர்.

—கா. மு. சிதம்பரன், திருவையாறு.

★

ஆற்றதமிழ்க் கல்வி யறியாது நாமிருக்க
வேற்றுமொழி இந்திவர வேண்டேன்நான்-சீற்றம்
தணிகநீர் என்றுரைத்த தையல்கேள் சாகத்
துணிந்தவருக் கில்லை துயர்.

—க வீ. வரதன், சென்னை-23.

★

கும்பி நிரப்புதற்குங் கூழின்றிக் காய்ந்துமெல்ல
அம்மைத் தமிழ்பயின் றாளாகி-தம்பீ!
அணிதமிழைக் கொல்வாரை அஞ்சாது கொல்வோம்
துணிந்தவருக் கில்லை துயர்.

—செல்வதாசன், சென்னை-1.

★

பின்வந்தார் ஆட்சிக்கீழ் பீடழிந்து ஊமைகளாய்த்
தென்தமிழர் வாழ்வதுவோ திண்தோளா-கொன்னே
பணியோம் இனிப்புரட்சி பார்மீது செய்வோம்
துணிந்தவருக் கில்லை துயர்.

—முருகதாசன், சென்னை-11.

★

தாய்நாட்டின் மீட்சியிலே தீந்தமிழர் ஆட்சியிலே
ஏய்த்துப் பிழைப்போர்க் கிடமில்லை-நேயப்
பணிபுரிந்து சூதுடன்பொய் பித்தலாட்டம் நீக்கத்
துணிந்தவருக் கில்லை துயர்.

—பி. தேவஅரசு, திருச்சி.

★

பைந்தமிழன் எல்லை பறிபோகப் பார்த்திருக்கும்
மந்திரி யோகம்மை வாழவைப்பார்?-செந்தமிழா!
ஏந்திடுவாய் கத்தி,காம் எல்லைகளை மீட்பதற்கு
துணிந்தவருக் கில்லை துயர்.

—சுபமணி, மதுரை.

★

கற்றோருக் கில்லை அவையஞ்சல்; கல்லாத
மற்றோருக் கில்லை மதிநுட்பம்;-முற்றும்
முனிந்தவருக் கில்லை முறைநீதி; என்றுந்
துணிந்தவருக் கில்லை துயர்.

—கு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

★

இன்னல் எதுவரினும் இன்பமுடன் அத்தனையும்
கன்னலென்றே ஏற்பதற்கு நான்வருவேன்-என்றே
அணிதந்த செந்தமிழை அன்போடு காக்கத்
துணிந்தவருக் கில்லை துயர்.

—சு. சேதுராமலிங்கம், மதுரை.

★

காரிடிபோற் றுன்பம் கடுகடுத்து வந்தாலும்
யாரிடமும் செல்லா திரவாமல்-பாரிற்
பணிசெய்து கையின் பலனுண்டு வாழத்
துணிந்தவருக் கில்லை துயர்.

—அ. கிருஷ்ணன், சரவணபட்டி.

★

நாப்பிறழும் நேருவுக்கோ நாணமில்லை! நாளுக்கோர்
தீப்பிழம்பைக் கக்கிபல திட்டுரைத்தார்-கூப்பிப்
பணிந்திடுமோ பம்பைநகர்? பார்த்தறிவாய்; என்றும்
துணிந்தவருக் கில்லை துயர்.

—த. வே. சீனிவாசன், பாப்பாரபட்டி.

★

மெய்ப்புகழும் நற்றொண்டும் மேதினியில் செய்வதொடு
கொய்யாக் கனிநல் திராவிடத்தை-மெய்யாய்
அணிபெறவே செய்திடுவார் அண்ணாவே, ஆய்வாய்!
துணிந்தவருக் கில்லை துயர்.

—இரா. வடிவேல், ஈரோடு.

★ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.